



| | ரூ | அ |
|---|---|---|
| ...ருட சந்தா ... ... ... | ... | ...0 |
| மாத சந்தா ... ... ... | 1 | 12 |

# [வாரப்பதிப்பு.]

ஆசிரியர்
ஈ. வெ. இராமசாமி நாயக்கர்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| வெளி நாட்டிற்கு சந்தா ... | 4 | 0 |
| விளம்பரம் அங்குலம் 1-க்கு ... | 0 | 8 |

...லை 2 | அ... சித்திரை மீ 20-உ (2—5—26) ஞாயிற்றுக்கிழமை, ஈரோடு. | மலர் 1.



மகாத்மாகாந்திக்கு ஜே!

...ந்தேமாதரம்! அல்லாஹூ அக்பர்!!

## திருப்பூர்
## சுத்த கதர் ஜவுளிகள்.

தமிழ்நாடு கதர் போர்டாரால் அத்தாட்சிப் ...த்திரம் பெற்ற ...கள் டிப்போவில் பலரகம் ...ஷ்டிகள், துண்டுகள், வெள்ளைப்பீசுகள் ஷர் ...டிங், கோட்டிங், ...டி கினுசுகள், தாவணிகள், ...ங்கடிச்சேலைகள், ...ல்வைகள், அச்சுவேஷ்டிகள் ...டைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். ...ரதி ஆர்டருடன் 100-க்கு 25 ரூ. வீதம் அட் ...ான்சு அனுப்பவேண்டும், வி. பி. அனுப்பமுடி ...த வெளிநாட்டு ...ர்டர்களுக்கு பூராத்தொகை ...ம்முன் பணமாக அனுப்பவேண்டும்,

ஆர். டி. முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிபோ, திருப்பூர், (தென் இந்தியா,)

வந்தேமாதரம்.

## கரூர் ...யப் கத்தர்.

தமிழ்நாட்டு கத்தர் போர்டாரால் அத்தாட்சி ...த்திரம் பெற்ற ...ழ்கண்ட கத்தர் ஸ்டோரில் ...டை நாணயத்திலும் ... ...டித்து உழைக்க... ...கள் துண்டுகள், ... ...ள். ஷர்ட்டிங், கோட்... ...த்தர் போர்டின் ... ...தவைக்கு அட்வான்சுடன் ஆர்டர் செய்யுங்கள்.

...ஸ். ராமசாமி ...ய்யர்,
ராமவிலாஸ் கதர் ஸ்டோர்ஸ், கரூர்.

(அத்தாட்சிப் பத்திரம்.)

(தமிழ்நாட்டு காங்கிரஸ் கமிட்டி) ஸ்ரீமான் ...ஸ். ராமசாமி ஐய்யர் ராமவிலாஸ் கத்தர் ...டோர் கைநூலில், கைத்தரியால் தயார்செய்ய ...பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்தி ...செய்து நியாயமான விலைக்கு விற்றுக்கொண் ...ருக்கிறார்.

...ஸ். ராமநாதன். காரியதரிசி கத்தர் இலாகா

## திருப்பூர்
## சுத்த கத்தர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சிட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள், இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும், தேவைக்கு உடனே ஆர்டர் செய்யுங்கள். ஆர்டர் 100-க்கு 25 ரூபாய்வீதம் அட்வான்சு அனுப்பவேண்டும், வி. பி. அனுப்பமுடியாத வெளிநாடுகளுக்கு பூராத்தொகையையும் முன் பணமாகவே அனுப்பவேண்டும்.

(அத்தாட்சிப் பத்திரம்.)

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி.

ஸ்ரீமான் என். கே. சங்கரப்ப செட்டியார் கைநூல் கைத்தரியால் தயார் செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார்.

S. இராமநாதன்,
காரியதரிசி, கத்தர் இலாகா.

விலாசம்:—

என். கே. சங்கரப்ப செட்டியார்,
... ஸ்டோர். திருப்பூர். (தென் இந்தியா.)

## ...வஸ் அத்தாக்ஷி
## பெற்ற சுத்த கதர்.

தமிழ்நாடு காங்கிரஸ் கதர் போர்டின் விலைக்கே விற்கப்படும். எல்லா ரகங்களும், கிடைக்கும், விலை ஜாபிதாவுக்கும் மற்ற விபரங்களுக்கும், கீழ்கண்ட விலாசத்துக்கு எழுதவும், சாம்பிள் (மாதிரிக்கு) 4 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

கற்பக விநாயகர் கதர் நிலையம்.
வஞ்சிக்குளி S. I. Ry.

## திருப்பூர்
## சுத்த கதர் ஜவுளிகள்,

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சிட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூராத் தொகையையும் முன் பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத்தரியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார்.

S. இராமநாதன்: காரியதரிசி, கத்தர் இலாகா

விலாசம்:—

ஆர், எம். எஸ் சிதம்பரம் செட்டியார்,
முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர். (தென் இந்தியா)

## கத்தர் வியாபாரிகளுக்கு
## அறிக்கை.

தமிழ்நாடு கத்தர் போர்டின் அத்தாட்சிப்பத்திரம் பெற்றிருக்கிறது, எங்கள் கதர் ஸ்டோரில் எல்லா விதமான தினுசுகளும் தயாராகிறது. கதர் போர்டின் விலைக்கே கொடுக்கிறோம். அட்வான்சுடன் ஆர்டர் அனுப்புங்கள்.

கே. எஸ். ஆர். எம். ராமசாமி செட்டியார்,
கத்தர் ஸ்டோர் அமராவதிபாளையம்,
பொன்னுக்காளிபாளையம் போஸ்டு,
(திருப்பூர் மார்க்கம்.)

# முதலாவது இளந்தமிழர் மகாநாடு.

24—4—26-ல்
சீர்காழியைச் சார்ந்த எருக்கூரில் கூடியது.

ஸ்ரீமான் தே. கிருஷ்ணசாமிப் பாவலரின் பிரசங்கம்.

## முன்னுரை.

அன்பர்களே!

இந்த முதலாவது இளந்தமிழர் மஹாநாடு இந்த எருக்கூரில் கூடியது மிகவும் போற்றத்தக்கதாகும். இவ்வரும்பதியின்கண் நீங்கள் நடத்தும் இந்த மஹாநாட்டிற்கு என்னைத் தலைவனாகத் தெரிந்தெடுத்ததற்காக நான் என் மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறேன்.

## தமிழ் இளைஞர்கள் செய்யவேண்டுவதென்ன?

எல்லாவற்றிற்கும் நாம் வயதாலும் அனுபவத்தாலும் பெரியோர்களையே எதிர் பார்க்கவேண்டும் என்ற காலம் மலையேறிவிட்டது. அவர்கள் இளைஞர்களைப்போல் தளரா ஊக்கமும் வலிமையும் கொண்டு தங்கடன் ஆற்றவல்லவர் அல்லர் என்பது நிச்சயம். தோல்விகள் வந்த காலத்தில், அவர்கள் தாங்கள் எடுத்த கருமத்தை முடிக்கத் தெரியாது சோர்ந்து போகின்றனர். ஆதலின் அவர்கள் வேலையை இளைஞர்களாகிய நீங்களே மேற்கொள்ளல் வேண்டும். உண்மையான தேசியப் பற்றுக்கொண்டு தளராமல் தொழிலாற்றக் கூடியவர்கள் இளைஞர்களே என்பது நவீன மனோதத்துவ ஆராய்ச்சியினால் பெறப்பட்ட உண்மையாகும். அனுபவத்திலேயும் பாருங்கள். பெரியவர்கள் என்று சொல்லிக்கொள்பவர்கள் யாண்டும் தோல்வியையே கண்டு வருகின்றனர். ஆகவே, பொதுக் காரியங்களில் இனி இளைஞர்கள் தனித்து நிற்பதற்கில்லை. இக்காலத்தில் எல்லோரும் பொறுப் பேற்றுத் தங்கள் கொள்கையை நிலைநாட்ட முற்பட்டுள்ளனர். செல்வர்கள் ஆள்கின்றனர்; ஏழைகள் ஆள்கின்றனர்; பெண்கள் ஆள்கின்றனர். அங்ஙனமாக, என் இளைஞர்கள் மாத்திரம் எழுந்து முன் அணியில் வெளிவருதல் கூடாது?

## உலகில் இளைஞர்களின் இயக்கம்.

உலகத்தின் எந்தப் பாகத்திலும் இளைஞர் இயக்கம் வன்மை பெற்று விளங்குகிறது. ஜர்மனி துருக்கி முதலிய நாடுகளில் இளைஞர் இயக்கம் மேன்மையடைந்து வருகிறது. இளைஞர் இயக்கங்கள் அந்தந்த நாடுகளில் ஊக்கத்துடன் உழைத்துவருதலே யன்றி இளைஞரையே தலைவர்களாகக் கொண்ட இயக்கங்களும் உண்மைத் தொண்டாற்றி வருகின்றன. அந்தந்த தேசத்தில் இந்த இளைஞர் இயக்கத்தின் பலனாக இளைஞர் நகரபரிபாலன சபை, இளைஞர் மேயருடன் தொழில் செய்து வருகிறது. அன்றியும் இளைஞர்க்கென பாராளுமன்றமும் உண்டு. தமக்கென சபைகளை ஏற்பாடு செய்துகொண்டு, தங்கள் நன்மைக்கான சட்ட திட்டங்களைச் செய்து கொள்கின்றனர்.

## தமிழ் நாட்டின் நிலைமை.

உலகமுற்றும் இங்ஙனமாக, நந்தமிழ் நாட்டு இளைஞர் என்ன செய்கின்றனர்? மாகாணத்தின் முற்போக்கை முதலில் கவனியாது. அகில இந்திய இயக்கங்களை எதிர்பார்த்து நின்ற குறையே நந்தமிழ் நாட்டை இந்த மிகத் தாழ்ந்த நிலைமைக்குக் கொண்டுவந்து விட்டது. வங்காளம், ஆந்திரம், கூர்ஜரம் முதலியன தமது பாஷைக்கும் தமது நாகரிகத்திற்கும், ஏனைய சிறப்புகளுக்கும் உழைத்துவரும் அளவிலும் நந்தமிழ் நாடு பிற்பட்டு விட்டது.

## தமிழ்மொழி வளர்ச்சியின் அவசியம்.

ஒரு நாட்டின் பெருமைக்கு அந்த நாட்டின் மொழிவளர்ச்சி இன்றியமையாததாகும். பாஷையி ... னற்றுன் அந்தந்த சாதியா... யக்கிடக்கிறதென்று சர்ஜான் ... பாஷையே, நாகரிகத்தை அளக்கும் கருவ... ஆகவே, நாம் நமது தாய்ப் பாஷையில் எவ்வளவு பற்றுள்ளவர்களாக இருக்கிறோம்! இளந் தமிழர்களே நம் முன்னோர்கள் இந்த அருமந்த பாஷையின் பெருமையைக் காக்கச்செய்த தியாகங்களைக் கவனித்தால், நீங்கள் நமது தாய்ப்பாஷையை ஒரு சிறிதும் புறக்கணித்துப் பரபாஷைகளைக் கற்றோம் என்னும் பெருமையடையமாட்டீர்கள். ஐம்பெருங் காப்பியங்களுள் இரண்டாவதாகிய சிலப்பதிகாரத்தை இயற்றியருளிய இளங்கோவடிகள் தமது அரசைத் துறந்தன்றோ தமிழ்மொழித் தொண்டில் ஈடுபட்டனர். இங்ஙனமெல்லாம் செல்வத்தாலும், அறிவாலும், மதிப்பாலும் உயரிய மக்கள் அரும்பாடுபட்டு நமக்கெனத் தேடிவைத்த தமிழ் நூல்களை நம்மில் பலரும் தொட்டேனும் பார்க்கின்றனர் இல்லை. பிறபாஷைகளில் பத்திரிகாசிரியர்களாகவும் பிரசங்கிகளாகவும் வெளிவருபவர்கள் அவ்வப் பாஷையில் ஒரு சிறிதாவது புலமைநிரம்பப் பெற்றவர்களாக இருக்கின்றனர். ஆனால் நமது தமிழ்நாடிலோ அப்படியில்லை.

## பண்டைப் பெருமையும் தற்காலச் சிறுமையும்.

பண்டைக் காலத்திலே அறிஞர்களும் வீரர்களும் ஞானிகளும், தியாகிகளும் வாழ்ந்த ஒரு பெரிய நாடு இப்போது இத்தகைய பல காரணங்களால் அன்றோ உயிர்ப் பாஷைகளால் நிரம்பப் பெற்றுள்ளன. பண்டைத் தமிழர்களின் தூய வாழ்க்கையும், சிறந்த குணங்களும் மங்கிப்பாழாய் விட்டன. உலகத்துள்ள பல தேயங்களையும் வெற்றிகொண்டு, ரோம், கிரீஸ், ஈஜிப்ட் முதலிய தேசங்களுடன் கலந்திறசெய்து வாணிபம்செய்து செல்வத்தால் கொழுத்திருந்த தமிழ்நாடு இதுபோழ்து அடைந்திருக்கும் நிலைமையை எண்ணும் போதெல்லாம் நெஞ்சம் பதருகிறதே! வயிறார ஒருநாளைக்கொருபோது உண்பதும் இன்றி பல லக்ஷக்கணக்கானபேர் வாடுகின்றனர். ஒருபோதும் உண்ண உணவின்றி வாடும் நாட்டை நிலத்தீர்வைப் பேய்நெருக்கி வாட்டுகிறது. உலகத்தில் இத்தக்கேடு கெட்ட நிலைமையில், ஆங்காங்கு சாதிச் சண்டைகள் சமயச் சண்டைகள் தலைவிரித்து ஆடுகின்றன. இன்னும் எத்தனை நாள் நாம் அந்நிய ஆட்சிமுறைக்கு அடிமைப்பட்டு கிடப்பது? நம்மவர்களுள் சிலர் தமது மானத்தைப் பட்டத்துக்கும் பதவிக்கும் ஆசைப்பட்டு விற்க முற்பட்டுவிட்ட இந்த நிலைமையில், இளந்தமிழர்களே நீங்கள் ஒன்றுகூடி ஊக்கத்துடன் தொண்டாற்ற வெளிவராவிடின், உங்கள்பின் வாழ்க்கை என்னவாகும் என்பதைக் கவனியுங்கள். தீண்டாமை என்னும்பெரிய பூதம் நம்முடைய நாட்டிலல்லவா முக்கியமாக மலையாளத்திலல்லவா அட்டகாசம்செய்து வருகின்றது. தமிழர் சமூகத்தையே வேரறுக்கவல்லும் இத்தீண்டாமை, தொடக் கூடாமை, பார்க்கக் கூடாமை என்பன தாண்டவமாடுதல் நமது துர் அதிர்ஷ்ட வசமென்றே சொல்லவேண்டும். தமிழர்களுக்கு ஜாதிப் பிரிவினையேது? அன்பு மதத்தைப் பரப்பிய ஸ்ரீராமானுஜர், சங்கரர் போன்ற மகான்கள் மேலக் கோட்டையிலும், மனீஷா பஞ்சகம் என்ற நூலிலும் முறையே காட்டிய கொள்கைகளை ஜாதிக் கொழுப்பேறியவர்களுக்கு எடுத்துரைத்தால் அவர்கள் அவற்றையெல்லாம் எங்கள் அறியோமென்று தள்ளிவிடுகின்றனர். ஆனால் அவர்களே தாங்கள் ராமானுஜரது மதத்தையும், சங்கரரது மதத்தையும் உண்மையாகப் போற்றுகின்றவர்களென்று தம்மைத்தாமே புகழ்ந்து கொள்ளுகின்றனர். அம்மட்டோ நம்முடைய சமுதாய வாழ்க்கையின் பரிதாப நிலைமை!

## ...ங்கள் ஆலயங்கள் நிலைமை.

கல்வி விருத்திக்கும், அறிவு விருத்திக்கும், செல்வ விருத்திக்கும் நிலைக்களனாக இருந்த மடங்களும் கோயில்களும் அறியாமைக்கு நிலைக்களனும் சோம்பேறிகளுக்கு இருப்பிடங்களாயிருந்து வருகின்றன. தவச் சாலைகளாகிய அவை இதுபோழ்து ... சாலைகளாயின. நீதிமன்றங்களாய் விளங்கிய அவை அநீதிமன்றங்களாய் இருந்து வருகின்றன. நமக்குள் ஒருவருக்கொருவர் பற்றும், நம்பிக்கையுமில்லாது அழிகின்றோம்.

## உங்களது கடமை யென்ன?

இளந்தமிழர்களே, இக்குறைகளையெல்லாம் நீக்க நீங்கள் ஒருமைப்பட்டு எழுந்து வெளிவாருங்கள். நீங்கள் நாட்டுத்தொண்டும், சமூகத் தொண்டும், சமயத்தொண்டும் ஆற்றுவதற்கு முன் வாராதவரையில் தமிழ்நாடு எவ்வாற்றானும் முன்னேற்றமடையாது. நீங்கள் ஸ்ரீ ஆசாரியன் சொல்லியபடி கர்மத்தைச்செய்யக் கடமைப்பட்டவர்களே யல்லாது கர்மத்தின் பயனை நோக்கக் கடமைப்பட்டவர்களல்ல. தமிழ்நாட்டின் எதிர்கால வாழ்க்கை இளந்தமிழர்களாகிய உங்களையே பொறுத்திருக்கின்றது. ... இயக்கத்திலும் ஆயிரக்கணக்கான இளைஞர்களே சிறைக்குச் சென்றார்கள். நீங்கள் உண்மைத்தமிழர்கள் வம்சத்தில் தோன்றியவர்கள் என்பதை நிலைநாட்ட வேண்டுமென்றால் எப்படியும் பழந்தமிழர்களாக வெளிவாருங்கள்.

## அன்பே தமிழரின் மதம்.

அன்பே தமிழர்களின் மதம். அன்பே தமிழர்களின் கடவுள். சைவர், வைணவர், கிறிஸ்தவர், மகம்மதியர் முதலானோர் வழிபடும் வகைகளெல்லாம் ஒரு கடவுளையே குறிக்கின்றது. ... மதமும் சம்மதம் என்று கூறிய தாயுமானவர், வழியுறுத்திய இந்த சமரச சன்மார்க்க சமயமே தமிழரது சமயமாகும். ஆகவே உண்மையான இந்தத் தமிழ்ச்சமயச் சார்புடையவர்களாய் மேல் ஜாதி, கீழ் ஜாதி என்ற வகுப்பை யொழித்து உங்கள் தூய்மையான சமயத்தை நிலைநாட்டுங்கள்.

## வீண் பேச்சுகளால் பயனில்லை.

நம்முடைய முன்னோர்கள் இப்படி யிருந்தனர் அப்படி யிருந்தனர் என்று பேசுவதில் பிரயோசனமில்லை. காட்டுமிராண்டிகளாய்க் கானகத்தே காய் கனி கிழங்குகளை உண்டு மரத்தின் பட்டைகளையும், இலைகளையும் ஆடைகளாக அணிந்திருந்த ஆங்கிலேயர்களுக்கு நம் ஒரு காலத்தில் நாகரிகத்தைக் கற்றுக்கொடுத்தோம் என்று இப்பொழுது சொல்லிக்கொள்வதால் என்ன பயன் உண்டு. இனி நீங்கள் செய்ய கிடப்பது உண்மைத் தொண்டேயாகும். இளந்தமிழர் அனைவரும் ஒரே மதம், ஒரே ஜாதி, ஒரே கொள்கை என்ற நாட்டத்துடன் ஒற்றுமையாக சமூக, பொருளாதார விஷயங்களின் முற்போக்கில் உங்கள் கருத்தைச் செலுத்தி அடிமை விலங்கை அறுத்தெறியுங்கள். ஆக தமிழ் நாட்டைச் சீர்படுத்து முன்னம் நீங்கள் உங்களைச் சீர்படுத்திக் கொள்ளல்வேண்டும்.

## சுதேசியம்.

நமது தமிழ்நாட்டுக் கைத்தொழில்கள் அழிந்துவருகின்றன. தமிழ் இளைஞர்களாகிய நீங்கள் இனி தமிழ்நாட்டில்செய்த உடைகளையும், பொதுவாக இந்தியாவில் செய்யப்பட்ட சாமான்களையும் வாங்கி உபயோகிப்பதென்று உறுதி செய்து கொள்ளவேண்டும். அந்த உறுதியை நீங்கள் நிறைவேற்ற முயன்றால் தமிழ்நாடு நாளடைவில் முன்னேற்றத்தை அடைந்துவிடும். தமிழ்நாட்டில் அழிந்து வருகின்ற கைத்தொழில்கள் எல்லாம் பண்டைநாட்களைப்போல் அபிவிருத்தியடையும். முதன் முதலில் நீங்கள் சுதேசியத்தை பரதேச சாமான்களை இனி வாங்குவதில்லை என்ற கட்டுப்பாட்டை இளந் தமிழர்களாகிய நீங்கள் செய்து கொள்ளல் வேண்டும். உண்ணுவதற்குப்போதிய

(இதன் தொடர்ச்சி 15-ம் பக்கம் பார்க்க.)

## தமிழர்களுக்கு.

("சிவன்" எழுதுவது.)

1. மகாத்மாகாந்தி விரும்பும் சமூக தேசிய சுதந்திரந்தான் தமிழர்களுக்கு வேண்டுமேயொழிய, சுயராஜ்யக் கட்சியார் விரும்பும் வாய்வேதாந்த சுயராஜ்ய காலக்ஷேப உத்தியோகவேட்டை நமக்கு வேண்டாம்.

2. பார்ப்பனர்களுடன் கூட்டுறவு, பிராமணியத்தையும் தீண்டாமையையும் விட்டு விடாமல் அவர்கள் இருக்கும்வரையில் கிடையாது.

3. பிராமணியமும் தீண்டாமையும் பார்வைக்கிட்டும், உடனே தொலையவேண்டும்; அதற்காக பெரும்போர் நடத்தவேண்டும்.

4, "பிராமண உலகம் அஞ்சுவது" தீண்டாமை ஒழித்தலைக் கண்டுதான்.

தமிழர்களுக்குள்ளுள்ள; பிரிவினைப்பேயை ஓட்டி, பிராமணியத்தை ஒழிக்கவும் தீண்டாமையை ஒழிக்கவும் தமிழர்களின் வீரத்தை செயலில் காட்டவும், ஒற்றுமைப் படுவோமாக.

5. நந்தமிழர்கள் முன்னேற்றமடைய வேண்டுமானால், கதராடை உடுத்தி, பிராமணியத்தை ஒழிக்கவும் தீண்டாமை பேயை விரட்டவும் இன்றே முற்படுதல் வேண்டும்.

6. பிராமணியம் நாட்டை பாழாக்கும். சாதி வேற்றுமை வேண்டாம். சுயராஜ்யம் காலக்ஷேப வேட்டை, ஏழைத் தமிழர்களை ஏமாற்றும் வழி.

7. 'கதர் பெருக்கும் நாள் நெருங்கிவிட்டது.' பிராமணியம் ஒழியும் நாள் வந்துவிட்டது. 'தீண்டாமை தொலையும் நாள் கிட்டிவிட்டது.

நெருங்காமை தீட்டு மறையும் நாள் வந்துகொண்டிருக்கிறது.

தமிழர்களே! பார்ப்பன சூழ்ச்சிகளுக்கும், அவர் கைக்குழந்தைகளாகிய தமிழர் துவேஷிகளின் பசப்பு வார்த்தைகளுக்கும் அவர்கள் தினசரி, வாரப் பத்திரிகைகளின் பொய் அட்டகாசங்களுக்கும், செவி சாய்த்துவிடாதீர்கள். இரக்க புத்தியினால் கொஞ்சம் செவி சாய்த்தீர்களானால் தமிழர்களை பாதாள உலகத்தில் தள்ளிவிடுவார்கள்.

உசார்! உசார்!! உசார்!!!

8. சத்திய இயக்கமாகிய ஒத்துழையாமை விருக்ஷத்தை வேருடன் பிடுங்கி எறிந்தும், உலகப் பெரியோராகிய உத்தமர் மகாத்மா காந்தியடிகளுக்கு ஓராண்டு கடுங்காவல் தண்டனை விதித்து சபர்மதி ஆசிரமத்தில் இருத்தியதும், அடிகளின் இரு கண்களாகிய சௌகத்அலி, முகம்மதலி இருவர்களையும் அரசியலிலிருந்து பிரிந்து நிற்கும்படி செய்ததும், இன்னோரன்ன பல தீய திருவிளையாடல்களை புரிந்து வருகிறதுமான சுயராஜ்யக் கக்ஷிக்காரருக்கா தமிழர்கள் தங்கள் வாக்கை கொடுப்பார்கள்?

இல்லை! இல்லை!! இல்லை!!!

9. பிரித்தானிய ஏதேச்சாதி காரத்திலிருந்து இந்தியா விடுதலை பெறவேண்டுமானால், முதற்படி இந்துக்கள் பிராமணர்களுடைய சமூக சமய பந்தத்திலிருந்து விலக வேண்டும் என்று தமிழ்நாடு அறைகின்றது. அதை நாம் மனப் பூர்வமாய் ஆதரிக்கின்றோம்.

கள் வருமானம் ஏழைகளின் இரத்தம் என்பது உண்மையே. இரத்தம் குடிப்பது மகாபாதகம் என்பதும் உண்மையே. ஆனால் குடிகளைக் கெடுத்து, குடியன் பணத்தைப் பறித்து வரும் வரும்படியிலிருந்து பார்ப்பனரல்லாத மந்திரிமார்கள் மட்டுந்தானா ஊதியம் பெறுகிறார்கள்? மாகாண சட்டசபை, இந்தியா சட்டசபை, அரசாங்க சட்டசபை அங்கத்தினர்களும், மாகாண சட்ட சபை, இந்தியா சட்டசபைகளின் தலைவர் பதவிகளை வகித்து வருபவர்களும், இராணுவ கமிட்டி போன்ற பல கமிட்டிகளில் அங்கம் பெற்றுள்ளவர்களுமான சுயராஜ்யக் கக்ஷித்தலைவர்களும், காரியதரிசிகளும், அங்கத்தினர்களும், அபிமானிகளுமான இவர்கள் இந்த பிரித்தானிய அரசாங்கத்தாரிடமிருந்து நாளதுவரையில் சம்பளம் பிரயாணச் செலவு, தினசரிப் படிச்செலவு முதலியன பெற்றுக்கொண்டு வருகிறார்களே, அது எந்த வரும்படியிலிருந்து? கற்பூர வியாபாரத்தினால் அரசாங்கத்திற்கு வரும் வருவாயிலிருந்தா? இல்லையே! அதுவும் மேற்படி கள், சாராய வரும்படியிலிருந்து தானே! 'மாமியார் உடைத்தால் மண் சட்டி மருமகள் உடைத்தால் பொன் சட்டியா!" இந்த நீதிக்கு காங்கிரஸ் மனு தர்ம சாஸ்திரம் இடம் கொடுக்கிறதுபோலும். பேஷ்! பேஷ்!! பேஷ்!!! இதுதான் சட்ட நிரூபண சபையில் போய் மதுவிலக்குத் தீர்மானம் செய்து அரசாங்கத்தை திக்குமுக்காடச் செய்து சுயராஜ்யம் பெறும் வழியோ! தமிழர்களே! இதுவெல்லாம் பிராமணியம் கலந்த தேர்தல் தந்திரம். சமூகப் பூனைகள் இதுவரையில் மோக்ஷம் மோக்ஷம் என்று சொல்லிக் கொண்டு காய்ந்துபோன மாவிலையையும் தொப்பைப் புல்லையும் வைத்துக்கொண்டு (பழைய சோறு, போடுங்கள். உண்டுவிட்டு உங்களுக்கு பசியா வரம் கொடுக்கிறோம்.) என்று சொல்லி திரிந்தார்கள். இப்பொழுது அதுவும் முடியவில்லை. ஏன்? தமிழர்கள் விழித்துக்கொண்டு பிராமணர்களை சமூக விஷயங்களில் பகிஷ்காரம் (விலக்குதல்) செய்யமுற்பட்டு வருகிறார்கள். ஆனதால் அவர்கள் கூட்டத்தார்களுக்கு பிழைப்புக்கு வழிவேண்டுமே! மோக்ஷம் மோக்ஷம் என்னும் ஜெபத்தைவிட்டு, இப்போது மதுவிலக்கு என்னும் திருமந்திரத்தைச்சொல்லிக்கொண்டு, ஏழைமக்களை ஏமாற்றி சட்டசபைத்தேர்தலால் வெற்றிமாலை சூடி, தமிழர் கோட்டையில் பிராமணியக் கொடியை நாட்டி கலியுகம் முடியும் வரையில் தமிழர்களை 'தேவடியாள் மகன்' சிறைபிடித்து வந்தவன், முதுகுகாட்டி ஓடியவன் தொன்று தொட்டு அடிமை வேலை செய்பவன்' என்னும் இன்னோரன்ன பொய்ப்பெயரை ஊர்ஜிதம் செய்து ராஜீய விஷயங்களில் தமிழர்கள் இதுவரையில் முன்னேற்றமடைந்திருப்பதையும் கெடுத்து தங்கள் ஆதிக்கத்தை என்றும் நிலை நாட்டிக்கொள்ள பாடுபடுகிறார்களேயொழிய வேறில்லை. தமிழர்கள் வரப்போகும் சட்டசபைத் தேர்தலில் தோல்வியுற்றுவிட்டால் பிறகு மூவேழு இருபத்தொரு தலைமுறைக்கும் நாம் தலையெடுக்கமுடியா தென்பதை தமிழர் உலகத்திற்குப் பணிவுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். எவ்விதமும் நம்மவர்கள் முன்னேறவேண்டியதுதானே? அவர்கள் எக்கக்ஷியிலிருந்தாலென்ன [illegible] நினைத்துக்கொண்டு உங்கள் வாக்கை [illegible]ற்றானின் உளவாளிகளுக்குக் கொடுத்துவிடாதீர்கள். அவர்கள் பிராமணப் பூசாரிகளேயொழிய தமிழாபிமானிகளல்லவென்பதைப் பன்முறையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

---

### யதுகுல சங்கம், திருச்சினாப்பள்ளி.

1926-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 22-உ வியாழக்கிழமை திருசிரபுரம் ஜாபர் சாயபு தெருவிலுள்ள தென்னிந்திய நல உரிமை கூட்டுறவுச்சங்கக் கட்டடத்தில் சமஸ்பிரான் தெருவு, பெரியகடைத்தெருவு, ஜாபர் சாயபு தெருவிலுள்ள யதுகுல வாசிகளின் பொதுக்கூட்டமொன்று ஸ்ரீமான் முத்துகிருஷ்ண நம்பியார் அவர்களின் அக்கிராசனத்தின்கீழ் கூடி தங்கள் இனத்தவர்களின் முன்னேற்றத்திற்குக் கருவியாக யதுகுல சங்கத்தை ஸ்தாபித்தார்கள்.

அவ்வமயம் திருவாளர் D. கோபால கிருஷ்ணம்பிள்ளை அவர்களாலும் திருவாளர் T. கிருஷ்ணசாமி பிள்ளை அவர்களாலும் ஏப்ரல் 2, 3 தேதிகளில் ஸ்ரீரங்கத்தில் நடந்த சென்னை மாகாண இரண்டாவது யதுகுல மகாநாட்டில் நடந்த தீர்மானங்களையும் அதன் நோக்கங்களையும் எடுத்துக்கூறி, சங்கம் என்பதனால் உலகத்தார் அடையும் அளவிறந்த நன்மைகளையும், குலமுன்னேற்றம் கல்வி அபிவிருத்தி, ஐக்கியம், இவைகளைப் பற்றியும் அநேக மேற்கோள்களுடன் சபையோர் மகிழ்வுறுமாறு பெரியதோர் சொற்பொழிவு நிகழ்த்தப்பெற்றது.

பின்னர் சங்கம் தற்காலத்தில் நெ. 6 சமஸ்பிரான் தெருவில் சென்னை தலை சங்கத்துக்கு இதை கிளை சங்கமாக நிறுவப் படல்வேண்டுமென்றும் சங்கத்தின் தலைவராக ஸ்ரீமான் D. கோபாலகிருஷ்ணம்பிள்ளை அவர்களை ஸ்ரீமான் சிவநம்பியார் அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு, ஸ்ரீமான்கள் கிருஷ்ணசாமி நம்பியார் முத்துக்கருப்பண்ண சேர்வை, முத்துக்கோனார் முதலியவர்களால் ஆமோதிக்கப்பட்டு ஏகமனதுடன் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

உப தலைவர், மானேஜிங் கமிட்டி மெம்பர்களும் முறையே தேர்ந்தெடுக்கப்பட்டு சபைத்தலைவர் அவர்களுக்கும் கூட்டம்கூட இடம் உதவிசெய்த ஸ்ரீமான் வேதாசலம் பிள்ளை அவர்களுக்கும் வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் இனிது முடிவுபெற்றது.

யதுகுலபாலன்.

### ஏழாயிரம் பண்ணை பாலிய நாடார் சங்கம். 2-வது வருடக் கொண்டாட்டம்.

---

1926-ளு மே-மீ 16, 17-உக்கு சரியான அக்ஷய-ளு வைகாசி-மீ 3, 4 தேதி ஞாயிறு திங்கள் கிழமைகளில் ஏழாயிரம் பண்ணை பாலியநாடார் சங்கத்தின் 2-வது வருஷக்கொண்டாட்டம் "குடிஅரசு,' பத்திராதிபர் ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அக்கிராசனத்தில் நடைபெறும். திங்கள் கிழமை மாலையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெறும்.

# சபர்மதி ராஜி.

## சில தமிழ்ப் பத்திரிகைகளின் அபிப்பிராயமும் ஐயங்கார் கோஷ்டியும்.

"தமிழ் நாடு"

ஆமதாபாத்தின் உடன் படிக்கையானது சுயராஜ்யக்கக்ஷியின் வீழ்ச்சியின் ஆரம்பமாகும்..... ஒத்துழையாமைக்குப்பின்னால் இந்திய ராஜீயப்போக்கை கவனித்துப்பார்ப்போமானால், சுயராஜ்யக் கக்ஷியார்தான் கொஞ்சங் கொஞ்சமாக இறங்கி வந்திருப்பது புலப்படும். சர்க்கார் கொஞ்சங்கூட அசையவில்லை. இதிலிருந்து சுயராஜ்யக் கக்ஷியாரின் பலக்குறைவு நன்றாய் வெளிப்படுகிறது...மந்திரி உத்தியோகங்கள் முதலிய பதவிகளை சுயராஜ்யக்கட்சியார் ஏற்றுக் கொள்வதென்று ஏற்பட்டுவிட்டால், பின்னால் மற்றக்கட்சியாருக்கும் அவர்களுக்கும் எவ்விதத்தில் வித்தியாசம் இருக்கப்போகிறது...சர்க்கார் பணிவதற்கு முன்பு காங்கிரஸ் ஒத்துழைக்க ஆரம்பித்து விட்டால் நமது நிலைமை 1920ம் ஹு த்திலிருந்ததைவிடக் கேவலமானதாயிருக்குமே யொழிய சிலாக்கியமானதாயிருக்காது ...ஏழைகளுக்கு இந்நாட்டிலுள்ள பெரிய பிரதிநிதி சபை காங்கிரஸ் சபை ஒன்றுதான். அதைச்சேர்ந்தவர்கள் உத்தியோக வேட்டையில் திரும்பிவிட்டால், பின்னால் ஏழைகளுக்கு அங்கு வேலையும் இடமுமில்லாமல் போய்விடும்.

"நவசக்தி"

"அதிகார வர்க்கம் எதற்கும் அசையாது நின்ற நிலையிலேயே நின்று வருவதும், தலைவர்கள் (சுயராஜ்யக்கட்சித்தலைவர்கள்) அடிக்கடி உறுதியினின்றும் பிறழ்ந்து வருவதும் ஊன்றிக் கவனிக்கற் பாலன்.....அதிகார வர்க்கம் அசையாமல் இருக்குமிடத்திலேயேயிருக்கிறது. காங்கிரஸ் (சுயராஜ்யக்கட்சி) சிறிது சிறிதாக நகர்ந்து அதன் அடிபணிய நெருங்குவது வெள்ளிடைமலை. இவ்வாறு கோணல் முறையைத் தலைவர்கள் கடைப்பிடித் தொழுகுவதைப் பார்க்கினும் நேரே ஒத்துழைப்பு என்று தேசத்தார்க்குச் சொல்லி விடுவது நலந்தருவதாகும்...இம்முடிவில் பதவி பேற்றிருப்பதும், அதைத் தீர்மானிக்கும் பொறுப்பு அவ்வம்மாகாணச் சட்ட சபை அங்கத்தவர் பாலிருப்பதும், அதை ஊர்ஜிதப்படுத்தும் பொறுப்பு இருவர் வயப்பட்டுக்கிடப்பதும் தேசத்தை விலங்கிடுவது என்று கூறல் மிகையாது.

"ஊழியன்"

இவ்விருதிறத்தாருள்ளும் ஏற்பட்டுள்ள இந்த ராஜி நாட்டவருக்குப்பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கிறதென்றும் அரைகுறையாகப் பேச்சளவிலாவது இருந்து வந்த ஒத்துழையா இயக்கத்தை ஒழித்துவிட்டதென்றுமே சொல்லவேண்டும். பண்டித நேரு மகாராஷ்டிரத் தலைவர்களுக்குப் பயந்தோ அன்றி வேறேக்காரணத்தினாலோ அவர்கள் வயப்பட்டு அவர்களிடம் சரண்புகுந்து விட்டார். ...பதவி பெற்றலென்பது காங்கிரசையே வேரைக் கல்லுவதாகும்...ஒற்றுமையை நாடி இந்த ராஜிசெய்துகொள்ளபட்டதாகச்செப்புகின்றனர். அப்படியாயின் மிதவாதிகள் மட்டும் பிரிந்து போக அனுமதிக்கலாமோ? அவர்களையும் ஒன்று சேர்ப்பது தானே...நாடும் நாட்டவரும் தேசிய விஷயங்களில் நாளுக்கு நாள் முன்னேறத்தலைவர்கள் பாடு பட வேண்டுமேயன்றிப் பிற்போக்கடையப் பாடுபடலாகாது.

"தேசபக்தன்"

இந்த ராஜி ஒத்துழையாமையைக் குழி தோண்டிப் புதைத்து விட்டது. அதிகார வர்க்கத்திற்கு முட்டுக்கட்டை போடுவதற்குப் பதிலாக தேச முன்னேற்றத்திற்கு சுயராஜ்ஜியக்கட்சியார் முட்டுக்கட்டை போட்டு விட்டார்கள். மந்திரி உத்தியோகம் போன்ற உத்தியோகங்களை ஏற்றுக்கொள்ளலாமென்ற பிரச்னையைப் பண்டித நேரு ஒத்துக்கொண்டார். "அதிகாரவர்க்கம் நம்முடன் ஒத்துழைக்க எண்ணி நமது கோரிக்கைகளை ஒப்புக்கொண்டாலன்றி உத்தியோகங்களை ஏற்றுக் கொள்ளமாட்டோம்" என்று பண்டித நேரு சொன்ன சொல் காற்றில் பறந்து விட்டது...தேர்தலில் வெற்றிபெற்று இவர்கள் செய்யப் போவதென்ன? உத்தியோகங்களையும், பட்டங்களையும் பணிவுடனேற்று ஒத்துழைத்து அடிமைத் தளைகளை வலுப்படுத்தி விடுவார்களென்றே நினைக்க இடமிருக்கிறது.....

இப்போது சுயராஜ்ஜியக்கட்சியாருக்கும் பரம மிதவாத கோஷ்டியாருக்கும் ஜஸ்டிஸ் கட்சியாருக்கும் விசேஷ வித்தியாசங்களிருப்பதாகத்தெரியவில்லை. "வர வர மாமியார்....." என்றது போலவே சுயராஜ்ஜியக்கட்சியாருடைய கதி இருக்கிறதெனச் சொல்வதில் என்ன பிசகு? நமது தலைவர்களுக்கு என்று நல்லறிவும் தன்னம்பிக்கையும் ஏற்படுமோ பார்ப்போம்?

"திராவிடன்"

உத்தியோகங்களை ஏற்றுக் கொள்ளலாமென்று சபர்மதியில் முடிவுக்கு வந்து விட்டார்கள். எனவே, இவர்களுக்கும் சாஸ்திரி சிந்தாமணிக் கூட்டத்தாருக்கும் இப்பொழுது என்ன வேற்றுமை யென்பது நமக்கு விளங்கவில்லை.....ஜெயக்கர் கூட்டத்தாரை "தேசத்துரோகிகள்" என்று தூற்றிய நேரு-ஜெயக்கர் கூட்டத்தார் தொலைந்தால்தான் சுயராஜ்யக்கட்சி நல்வழிப்படும் என்ற மோதிலால்-இப்பொழுது அந்த "தேசத்துரோகி"களுக்கு அடிபணிந்து போனதற்குக் காரணமென்ன வென்பதை ஒவ்வொருவரும் ஊன்றி நோக்குதல் வேண்டும்.....அரசாங்கத்தார் மனப்பான்மையோ முன்னிருந்தபடியே இருக்கின்றது. இன்னும் கீழே இறங்கவில்லை. அவ்வாறாக ஏனோ சுயராஜ்யக் கட்சியார், இப்பொழுது தங்கள் கொள்கைகளை மாற்றிக்கொள்ளவேண்டும். எல்லாம் ஓட்டர்களை ஏமாற்றவே!

"சுயராஜ்யா"

இவ்வொப்பந்தத்தின் மூலம் உத்தியோக மேற்பதற்கான நிபந்தனை தளர்த்திவிடப்பட்டிருக்கிறதென்பது தெளிவு. இன்னும் தான் தளர்த்திய போதிலும் கெவர்ன்மெண்டார் நமக்கு இணங்கப்போகின்றனரோ?

"அகில பாநு."

சர்க்கார் கொஞ்சங் கூட இணங்காதிருக்கும் போதே காங்கிரஸ் கொஞ்சங் கொஞ்சமாகத் தன் கொள்கைகளை நழுவ விட்டுக்கொண்டே வருகிறது. அவைகள் வழியில் நடப்பதைப்பார்க்கிலும் அதிகாரவர்க்கத்தோடு நேராக ஒத்துழைத்து விடலாம். மறைவாக நின்று காங்கிரசுக்கு விரோதமாக நடப்பது தேசத் துரோகமாகும்.....சபர்மதியில் தலைவர்கள் கூடி வெளியிட்ட அறிக்கை தேசத்திற்கும் காங்கிரசுக்கும் எவ்விதத்திலும் பொருந்தாது. அது முற்றிலும் துரோகமாகும்.

"ஸமரச போதினி."

காங்கிரஸ் வர வர வழ வழ என்று ஆகிறதைக் கண்டு வருந்துகிறோம்.....உத்தியோகக் கக்ஷி வேலை செய்ய ஆரம்பித்துவிட்டது. .........அப்போது சுயராஜ்யக் கக்ஷி உத்தியோகம் ஏற்காத சட்டசபைக் கக்ஷியாக மாறியது; இப்போது சபர்மதி ஒப்பந்தப்படி சில நிபந்தனைகள் பேரில் உத்தியோகம் வகிக்கலாம்; இனி இந்த நிபந்தனைகளும் இல்லாமல் உத்தியோகம் வகிக்கலாம் என்பதுவே அடுத்தபடியாயிருக்கும். அதற்கடுத்தபடி அதிகார வர்க்கத்துடன் கூடிக்குலாவுதலே.........இப்படி படிப்படியாக தேசிய ஊக்கம் இறங்கிவந்தால் தேசமக்கள் மனத்தில் ஒரு குழப்பம் ஏற்பட்டு அவர்கள் ராஜீய உணர்ச்சி குன்றிப் போய்விடும் என்பதில் தடையோ?.........................

இவ்வாறு தமிழ்நாட்டில் நிலவும் பத்திரிகைகளில் பெரும்பாலன எதிர்த்து அபிப்பிராயத்துடனிருக்கும்போது, 'சுதேசமித்திரன்' போன்ற உத்தியோக நதியில் ரகசியமாக நீந்தும் ஒருசில பத்திரிகைகள் அவ்வொப்பந்த முடிவைப் போற்றி எழுதி பொதுஜனங்களை ஆதரிக்கத் தூண்டுவதும் அப்பத்திரிகைகள் பலநாளாகக் கொண்டிருந்தக் கருத்துகளைத்தான் இப்பொழுது வெளிப்படையாகக் கூறுகின்றன என்பதைக் நாம் சொல்லுவதற்கு முன்னேயே பொதுமக்கள் அறிந்து கொண்டிருப்பார்கள். சிறக்க

சபர்மதி ஒப்பந்தத்தைக் கண்டித்துச் சென்னை மகாஜனங்களால் திருவல்லிக்கேணி கடற்கரையில் 25—4—26ல் ஒரு பெருங்கூட்டம் கூட்டப்பட்டது. அக்கூட்டத்தில் தலைமை வகித்த திருவாளர் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் ராஜியைப் பற்றி பேசும்போது "அவர்கள் (சர்க்கார்) நமக்கு ஒரு அங்குலமுமிணங்காமலிருக்க, நாம் மாத்திரம், நமது திட்டங்களினின்றும் சிறிது சிறிதாக நகர்ந்து, நகர்ந்து அவர்கள் பாதங்களில் விழுவதேன்" என்றும், "இவ்வொப்பந்தத்தில் ஒரு பெரிய மோசமிருக்கின்றது. இவ்வேற்பாடு முற்றிலும் தவறுடைத்து. இதில் இரட்டை ஆட்சிக்கு நல்வரவும், பதவியேற்றலும் மிளிர்கின்றன," என்றும் "இனி தலைவர்களது ராஜ்யம் தலை சிறந்து விளங்குதல் கூடாது" என்றும் கதறி, மே மாதம் 5, 6. தேதிகளில் கூட்டப்போகும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் "தலைவர்" (?) சீனிவாசய்யங்காரை விசேஷக் காங்கிரஸ் ஒன்று கூட்ட வேண்டுமாறு போர்புரியும்படி கேட்டுக் கொண்டுள்ளார். அக்கூட்டத்திலேயே மற்றை யோரும் அந்த ராஜித்தீர்மானத்தை

# இனி செய்யவேண்டியது என்ன?


மத்திய மாகாண அரசாங்கத்தார் மந்திரிகளுக்கென்று மாற்றப்பட்டிருந்த இலாக்காக்களை எடுத்துக்கொண்டு இனிமேல் மந்திரிகள் இல்லாமலே சகல நிர்வாகத்தையும் தாங்களே நடத்துவதென்று தீர்மானித்து விட்டார்கள். இதன் பலனாய் இரட்டையாட்சி ஒழிந்ததென்றே வைத்துக்கொள்ளலாம். மத்திய மாகாணத்தில் இரட்டை ஆட்சியை ஒழித்த பெருமையை சுயராஜ்யக் கட்சியாருக்கே கொடுத்துவிடலாம். சுயராஜ்யக் கட்சியாருக்கு இந்தப் பெருமையை உண்டாக்கிக்கொடுத்த பெருமையை, மகாத்மா சொற்படி நடப்பதாகச் சொல்லிக்கொண்டு சுயராஜ்யக் கட்சிக்கு உதவிசெய்த ஸ்ரீமான் முதலியார் போன்ற உண்மைச் சிஷ்யர்களுக்குக் கொடுத்துவிடலாம். ஆனால் தேசத்திற்கு இதனால் என்ன லாபம். மந்திரிகளின் சம்பளம் சர்க்காருக்கு இதனால் மீதியாய் விட்டது. இரட்டை ஆட்சி ஒழிந்து சர்க்காரின் ஏதேச்சாதிகார ஒத்தை ஆட்சி உறுதியாய் விட்டது. சுயராஜ்யம் கிடைத்து விட்டதா? உரிமை கிடைத்து விட்டதா? சுயராஜ்யத்திற்காவது உரிமைக்காவது ஏதாவதொரு அறிகுறியாவது ஏற்பட்டிருக்கிறதா? இரட்டை ஆட்சியை ஒழித்தபிறகு இரட்டை ஆட்சியை ஒழிக்கப்போன சுயராஜ்யக் கட்சியாருக்கு மறுபடியும் சட்ட சபையில் என்ன வேலை? சுயராஜ்யக் கட்சியார் சென்ற தேர்தலில் நின்ற காலத்தில் ஓட்டர்களிடம் கொடுத்த வாக்குறுதியென்ன? "சட்ட சபைக்கு எங்களை அனுப்புங்கள், நாங்கள் அங்குபோய் முட்டுக் கட்டை போட்டு இரட்டை ஆட்சியை ஒழித்து சர்க்காரை நடைபெறாமல் செய்து விடுகிறோம்; அப்படி எங்களால் செய்ய முடியவில்லையானால் சட்டசபையை விட்டு விலகிவந்து ஜனங்களிடம் பிரசாரம் செய்து சட்டமறுப்பை ஆரம்பிக்கிறோம்" என்று சொன்னார்களல்லவா? இப்பொழுது அந்தப்படி செய்தார்களா? சட்டசபைக்குப்போன உடனேயே முட்டுக்கட்டை போட தங்களால் முடியவில்லையென்று தெரிந்தும், இரட்டை ஆட்சியை ஒழித்துங்கூட சர்க்கார் நின்றுவிடவில்லையென்று தெரிந்தும், இரண்டரை வருஷகாலம் சட்டசபைப் பெருமையை அடைந்துக்கொண்டு மறுதேர்தல் வருகிற சமயம் பார்த்து, "எங்களால் சபையில் ஒரு காரியமும் செய்ய முடியவில்லை; சர்க்காரை எங்களால் ஜெயிக்க முடியாது; கெஞ்சியும் பார்த்தோம், கூத்தாடியும் பார்த்தோம், சர்க்கார் எங்களைக் கொஞ்சமும் லக்ஷியங்கூட செய்யவில்லை, சட்டமறுப்புக்கும் தேசம் தயாராயில்லை, நாங்கள் இனி இங்கிருப்பதில் பிரயோஜனமுமில்லை, ஜனங்களிடம் இந்த விஷயத்தை எடுத்துச் சொல்லுவதற்காக நாங்கள் வெளியே போகிறோம்," என்று சொல்லிக்கொண்டு வெளியில் வந்தவர்கள் உண்மையில் யோக்கியர்களாயிருப்பார்களானால் இனிச்செய்ய வேண்டிய வேலை யென்ன? நிர்மாணத் திட்டத்தையாவது நிறைவேற்றவேண்டும். அல்லது சட்ட மறுப்புக்காவது தேசத்தைத் தயார் செய்ய வேண்டும். இரண்டையும் விட்டுவிட்டு "மறுபடியும் நாங்கள் சட்ட சபைக்குப் போகிறோம். எங்களுக்கு ஓட்டுக் கொடுங்கள்" என்று பொதுஜனங்களைக் கேட்பதிலும் ஸ்ரீமான் முதலியார்போன்றவர்கள், "சுயராஜ்யக் கட்சியார் வானத்தை வில்லாய் வளைத்து விடுவார்கள், மணலைக் கயிறாய்த் திரித்து விடுவார்கள், சுயராஜ்யக் கட்சியார் ஒருவர்தான் தேசத்தில் யோக்கியர்கள், அவர்கள் தான் சொல்லுகிறபடி நடக்கிறவர்கள், அவர்கள் மேல் ஒத்துழையாவாசனை வீசுகிறது, ஆதலால் அவர்களுக்கு ஓட்டுக்கொடுங்கள்" என்று ஓட்டுவாங்கிக் கொடுக்க ஊரூராய்த் திரிவதிலும் ஏதாவது யோக்கியப் பொறுப்பு இருக்கிறதா? பாமர ஜனங்களுக்குப் போதுமான அறிவில்லை யென்பதையும், தங்களுடைய ஓட்டுகளை யோக்கிதா யோக்கிதை அறிந்து ஓட்டுக் கொடுக்கும் சக்தியில்லை யென்பதையும் ஆதாரமாக வைத்துக்கொண்டு, நமது நாட்டில் ஒரு கூட்டத்தார் தேச சேவை யென்கிற பெயரால் இம்மாதிரி அயோக்கியத்தனமான காரியங்களை யெல்லாம் செய்யத் துணிவார்களே யானால் பாமர ஜனங்களுக்கு ஓட்டுரிமை வாங்கிக் கொடுப்பதனால் என்ன பலன் கிடைக்கும். இம்மாதிரி பொறுப்பற்ற ஓட்டுரிமை நமது தேசத்தில் இல்லாதிருந்திருக்குமானால் மேற்கண்ட அவர்களுக்கு இவ்வளவு அக்கிரமங்கள் செய்ய இடமேற்பட்டிருக்காது. ஓட்டர்களுக்கு அறிவில்லை யென்று சொல்லுகிறபோது யாருக்கும் கோபம் வருவதில்லை. ஆனால் இம்மாதிரி அறிவில்லாதவர்களை ஏமாற்றும் ஜனங்கள் மலிந்து கிடக்கும் இந்த நாடு இது சமயம் எவ்விதத்தில் உரிமைபெற யோக்கிதை உடையது என்று எவராவது கேட்பார்களே யானால், உடனே அவர்கள் பேரில் கோபித்துக் கொள்ளுவார்கள். "தேசத்துரோகி" என்று சத்தம் போட்டுவிடுவார்கள். அறிவில்லாத பாமர ஜனங்கள் நிறைந்த நாடு என்பதற்கும், உரிமை பெற யோக்கியதை இல்லாத நாடு என்று சொல்லுவதற்கும் அதிக வித்தியாசமிருப்பதாக நமக்குத் தெரியவில்லை. பெரும்பான்மையோரான பாமர ஜனங்களை உரிமை பெற யோக்கிதை உடையவர்களாக்கவேண்டுமென்கிற எண்ணங்கொண்டே "மகாத்மா காந்தி" எவ்வளவோ கஷ்டப்பட்டுப் பார்த்தார். எத்தனையோ உண்மையாளர்களும் அவரைப் பின்பற்றியும் பார்த்தார்கள். கடைசியாய் மானமற்றவர்களும் நாணயமற்றவர்களுமே ஜெயித்தார்கள். மகாத்மா "இந்தப் பாவிகள் நமது நாட்டில் உள்ளவரை ஏழை மக்கள் உரிமையடைய யோக்கியதையுடையவர்களாக மாட்டார்கள்" என்கிற முடிவின் பேரில் இவர்களை விட்டே விலகி, ஏதோ தன்னாலானதைத் தனித்து செய்து வருகிறார். இனி தேசம் கையில் வலுத்தவன் காரியமாய்ப் போய்விட்டது. எவனுக்கு மானமில்லையோ, எவன் தைரியமாய்ப் பொய் சொல்லக்கூடியவனோ, எவன் பணம் செலவு செய்து சிஷ்யர்களைச் சேர்த்துத் தன்னைத் தலைவனாக்கிக்கொள்ள சக்தியுடையவனோ, அவனுக்கு ஏழைகள் அடிமையாகத் தகுந்த நிலைமைக்கு வந்து விட்டது. இந்த நிலைமையில் தேசபக்தர்கள் செய்ய வேண்டிய வேலை யென்ன என்பதை ஒவ்வொரு உண்மை தேச பக்தர்களும் ஆராய்ந்து பார்க்கவேண்டும். தேசத்துக்கு உரிமை சம்பாதிக்கிறோமென்று சொல்லிக்கொண்டு அயோக்கியர்கள் பாமரர்களை வஞ்சிக்க இடங்கொடுப்பதா, அல்லது இவர்களின் யோக்கியதையை பாமர ஜனங்களுக்குத் தைரியமாய் எடுத்துச் சொல்லி உரிமை அடைய யோக்கியதை யுடையவர்களாக்குவதா? என்பதே நமது கேள்வி.

அழுத்தமாகக் கண்டித்துள்ளார்கள். ஆனால் நமது ஐயங்கார் கோஷ்டியின் வாசனை அங்கு வந்திருந்ததாகமட்டிலும் முகரப்பட்டதே தவிர அவர்களது சொற்பொழிவின் நாற்றம் நுகரப்படவில்லை. ஏனோ? தெருப் பொறுக்கிகள் கூட்டம் ஒன்றுகூடினால், அதற்கும் பணங்கொடுத்து தலைவர் பதவியைத் தேடிக்கொள்ளும் "ஸ்ரீஜத்" எஸ். சீனிவாசய்யங்கார் அக்கூட்டத்திற்கு வந்திருந்தும், தலைமை வகிக்கவோ, தன்னுடைய அபிப்பிராயத்தை வெளியிடவோ ஒருப்படாது மௌன விரதத்தில் ஆழ்ந்திருந்தார். அடிக்கடி திருவல்லிக்கேணி கடற்கரை கூட்டங்களில் அவதாரம் செய்து "ராமாயண சாஸ்திரி" போல போதனை பிரசங்கம் செய்வதால் "கடற்கரை சத்திய மூர்த்தி" என்ற பட்டப் பெயரால் அழைக்கப் பெறும் "ஸ்ரீமான்"(!) எஸ். சத்தியமூர்த்தி ஐயர் அவர்களது பெயராவது பேச்சாவது அம்மாபெருங் கூட்டத்தில் தொனிக்கவேயில்லை. "ஜெயங்கர் கட்சி உத்தியோகம் தேடும் கட்சி," "ஜஸ்டிஸ் கட்சி உத்தியோகவேட்டையாடும் கட்சி" என்று (தான் தனது குமார பாக்கியத்திற்கு ஐ. ம். எஸ். உத்தியோகம் வாங்கிக்கொடுத்த விஷயத்தை மட்டிலும் தவிர்த்து) பேசி, அதனால் அக்கூட்டத்தில் சேராதீர்களென்று பொது ஜனங்களுக்கு எச்சரிக்கைசெய்யும், "பிரம்மஸ்ரீ" (?) ஏ. ரெங்கசாமி ஐயங்காரின் வாசனைகூட அங்கு அடிக்கவில்லை. இதன் இரகசியம் என்ன? சட்ட சபைக்குள் புகுந்ததும் இந்த ஸ்ரீஜத்துக்களும் ஸ்ரீமான்களும் பிரம்மஸ்ரீகளும் உத்தியோகபதவியை ஏற்றுக்கொண்டபின் பொது ஜனங்கள் அவர்களை அணுகி "உத்தியோகம் ஏற்க மாட்டோம் என்று பேசினீர்களே, இப்பொழுது ஏன் உத்தியோகம் ஏற்றுக்கொண்டீர்கள்" என்று கேட்டால், அக்கேள்விகளினின்று தப்பித்துக் கொள்ளுவதன் பொருட்டேயாகும்.

இப்பொழுது 'தருவான்' தலைவர் (?) சீனிவாசய்யங்கார் பேச்சைக் கேள்ப்பதா, 'சிஷ்யரான' திரு. வி. கலியாணசுந்தர முதலியார் பேச்சைக் கேள்ப்பதா என்ற சந்தேகம் ஜனங்களுக்கு ஏற்பட்டுவிட்டது. இனியும் திரு. முதலியார் என்ன செய்யப் போகிறார் என்பதைக் கவனிப்போம்.

## திருச்சியில்.

திரு. ஆர். கே. ஷண்முகம் செட்டியார் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தைப் பற்றி எவ்விடத்தில் யாரிடத்தில் எப்போது கூறினர் என்று "நவசக்தி" கேள்க்கிறது. திருச்சியில் பிரசாரத்திற்கு வந்திருந்த பொழுது, க்ராமணரல்லாத பிரமுகர்களிடம் கூறினர்



அனைத்துயிர் ஒன்றென்று எண்ணி
அரும்பசி எவர்க்கும் ஆற்றி
மனத்துள பேதாபேதம்
வஞ்சகம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே

# குடி அரசு.

அக்ஷய-ஹு சித்திரை-மீ உ௰ உ

## நமது பத்திரிகை.

—:o:—

"குடி அரசு" ஆரம்பமாகி ஒரு வருஷம் முடிந்து, இரண்டாம் வருஷம் ஆரம்பமாகி விட்டது. இவ்வொரு வருஷ காலமும் "குடி அரசு" தன்னால் கூடியதை ஒளிக்காமல் உண்மையோடு உழைத்து வந்திருக்கிறது, என்பதைப்பற்றி நாமே உணர்ந்து திருப்தி அடைகிறோம். "குடி அரசை" ஆதரித்தும் ஆசி கூறியும் வரும் சமாச்சாரக் கடிதங்களிலிருந்தே இதை உணருகிறோம். இதுவரை "குடி அரசி"ன் தொண்டைப் பற்றிச் சிலாகித்து சுமார் முன்னூறு நானூறு கடிதங்களும், "குடி அரசி"ன் மீது குற்றம் சுமத்தி சுமார் 3, 4, கடிதங்களும் நமக்குக் கிடைத்திருக்கின்றன. சிலாக்கியமாய் எழுதியவர்களைப் பற்றி இதில் எழுத இடமில்லை; எழுதினாலும் தற்புகழ்ச்சியாக முடியும். ஆனாலும் குற்றங்கூறி எழுதியவர்களைப் பற்றி எழுதுவதற்கு இதில் இடமுண்டு. அதாவது குற்றங்கண்டு எழுதிய கனவான்கள் நான்கு பேர்; யாரென்றால்,

1. ஸ்ரீமான். எ. செங்கராம் நாயக்கர், ஆனைமலை.
2. ஸ்ரீமான். சுப்பிரமணிய ஐயர், நெரூர்
3. ஸ்ரீமான். இராஜரெத்தினமுதலியார் காஞ்சீவரம்.
4. ஸ்ரீமான். அ. குப்புசாமி முதலியார், வேலூர்.

இவர்களுள் முதலாவதவர் எழுதியதாவது:—

"உமது பத்திரிகையின் நோக்கம் நல்லதே, ஆயினும் அதன் போக்கு நமக்குப் பிடிக்கவில்லை" என்றும். இரண்டாவதவர், "தாங்கள் செய்து வரும் வேலையை ஜஸ்டிஸ் கட்சியாரே செய்து வருவதால், இதைவிட உபயோக முள்ளதான பழைய ஒத்துழையாமையிலிறங்கி வேலை செய்வீர்களானால் நாங்கள் அனேகம்பேர் தங்களைப்பின் பற்றத் தயாராயிருக்கிறோம்" என்றும். மூன்றாவது, நான்காவதவர் மிகவும் கடினமான வார்த்தைகளால் அதாவது "உமக்குப் புத்தி கெட்டுப் போய் விட்டது; ஜஸ்டிஸ் கட்சியை ஆதரிக்கத் தொடங்கி விட்டீர்கள்; நீர் யோக்கியர் அல்ல" என்று எழுதியதோடு ஜாக்கிரதையாயிருக்கும்படி எச்சரிக்கையும் செய்து எழுதியிருக்கிறார்கள்.

இதுவரை நமக்குள்ள சுமார் இரண்டாயிரம் சந்தாதாரர்களில் இந்நால்வர் அதிருப்திக்கே உள்ளாயிருக்கிறோம். இன்னும் அதிகமாயிருக்கலாமென்று சிலர் நினைக்கக் கூடுமென்றே, அவர்கள் பெயரையும் காட்டிவிட்டோம். அல்லாமலும் சுமார் 10. 12, பேர் வரையிலும் காரணம் சொல்லாமல் பத்திரிகை இனி அனுப்பவேண்டாம் என்று எழுதினார்கள். பத்திரிகை களிலேயும் நமது போக்கை "பிராமணன்" என்கிற ஒரு கும்பகோணப் பத்திரிகையும் "தேசபக்தன்" என்கிற ஒரு சென்னைப் பத்திரிகையும் தான் இதுவரை அடிக்கடி பலமாய்க் கண்டித்து எழுதி வருகின்றன. சர்க்காரும் நமது பத்திரிகை விஷயத்தில் கவனம் செலுத்தித்தான் வருகிறார்கள் என்பதற்கு, உதாரணமாக நமக்கு எச்சரிக்கைகள் கொடுத்திருப்பதிலிருந்தும், நமது பத்திரிகையில் குறிப்பிடும் அரசாங்க சம்பந்த மானவைகளும் அரசாங்க உத்தியோகஸ்தர் சம்பந்தமான விஷயங்களையும் கவனித்து கடிதப்போக்கு வருத்துக்கள் நடத்துவதிலிருந்தும் தெரிகிறோம்.

மற்றப்படி நமது பத்திரிகையைப் பற்றி நம்மிடம் நேரில் பேசுகிறவர்களில் சிலர் "எல்லாம் சரி, பிராமணர்களைத் திட்டுகிறீர்கள், அது போனாலும் போகட்டும், அதிக கடினமான வார்த்தைகளால் திட்டுகிறீர்கள். அது சில சமயங்களில் நமது "குடி அரசு" பத்திரிகையின் யோக்கியதையைக் கெடுத்து விடுகிறது," என்கிறார்கள். இவ்விரண்டும் உண்மையாயிருக்கலாம். அதற்கு நாம் என்ன செய்வது? இதன் ஆசிரியர் முதலில் சர்க்காருக்கு எவ்வளவு நல்ல பிள்ளையாக இருந்தாரோ, அதைவிட அதிகமாகத்தான் பிராமணர்களுக்கு நல்லபிள்ளையாக இருந்து வந்தவர். சர்க்கார் சார்பாக எத்தனையோ கலெக்டர்கள், நிர்வாக சபை அங்கத்தினர்கள் முதலியவர்களின் சினேகமும் கவர்னர் முதலியோரின் நன்றியறிதல் கடிதங்களும் பட்டம் முதலியவைகளுக்கு சிபார்சுகளும் பெற்றிருந்தாரோ, அதுபோலவே அநேக பிராமணர்களின் சினேகமும், உள்ளன்பும், உபசாரப் பத்திரங்களும், தலைவர் பட்டங்களும் பெற்றவர்தான். ஆனால் அவர் சர்க்காரின் குற்றங்களை எடுத்துச் சொல்லும்போதும், சர்க்காரை கடினமான வார்த்தைகளால் திட்டும்போதும், அதற்காக ஜெயிலுக்குப் போகும்போதும் "நாயக்கர் வெகு தைரியசாலி" "உண்மையான தேசபக்தர்" "வீரர்" என்கிற பெயர் பெற்றார். ஆனால் அவர் பிராமணர்கள் குற்றத்தை எடுத்துச் சொல்லும் போதும், அதற்கேற்ற 'கடின பதங்கள்' உபயோகிக்கும் போதும், பிராமணத் துவேஷியாகிவிடுகிறார். 'கடின பதம்,' என்றால் என்ன? பதங்களைப் பார்த்தால் போதுமா? குற்றங்களையும் குற்றம் செய்யும் ஆட்களையும் பார்க்க வேண்டாமா? குதிரையை அடிப்பதானால் கொரடாவை மேலே படும்படி வீசினால் போதும். எருமையை அடிப்பதானால் பெரிய தடி எடுத்துத்தான் தூக்கி அடிக்க வேண்டும். யானையை அடிப்பதாயிருந்தால் கூர்மையான இரும்புத்தடி (அங்குசம்) கொண்டு குத்த வேண்டும். இவற்றை அறியாமல் பேசுவதில் என்ன பலன். பிராமணர்களிடம் நமக்குத் துவேஷமில்லை. அவர்கள் சூழ்ச்சிக்கு நமது நாட்டில் யோக்கியதை இருக்கும்வரை நமக்கு விடுதலை இல்லை என்பது நமது துணிபு. ஆகவே, இவ்விரண்டில் பிராமணர் புன்சிரிப்பை எதிர் பார்ப்பதா, விடுதலையை எதிர் பார்ப்பதா?

நமது மக்களுக்கு பிராமண சூழ்ச்சியை அறிய சக்தியில்லை. பிராமணர்களின் வெகு காலத்திய சூழ்ச்சிப் பிரசாரத்தால் அவர்களிடம் ஏற்பட்டிருக்கும் 'பக்தி' காரணமாய் நமது பதங்கள் சிலருக்குக் கடினமாகக் காணப்படுகிறது. அவர்களால் நமது குடிகெடுவது நமக்குக் கடினமாகத் தோன்றவில்லை. நாமும் முதலில் மரியாதையாகத்தான் எழுதுகிறோம். அவர்களுக்கு அது சரியானபடி ஏறாததால் தைக்கும்படி எழுதுகிறோம். அதிலும் பிரயோஜனமில்லை. ஆதலால் நமது மக்களுக்குத் தெரியும்படி எழுதுகிறோம்.

"குடி அரசு" எவருடைய தயவுக்கோ, முகஸ்துதிக்கோ சுயநல வாழ்வுக்கோ, கீர்த்திக்கோ நடைபெறவில்லை. யோக்கியமாய்-உண்மையாய் நடக்கக்கூடிய காலம்வரை நடக்கும். அவ்விதம் நடக்க அதற்கு யோக்கியதை யில்லையானால்தானே மறைந்து விடுமேயல்லாமல் மானங்கெட்டு விலங்குகளைப் போல் உயிர் வாழாது.

"குடி அரசு" தோன்றிய பிறகு அது ராஜீய உலகத்திலும் சமூக உலகத்திலும் பெரிய மாறுதல் ஏற்படுத்தியிருக்கிறது என்று பலர் நமக்கு எழுதியிருப்பதை நாமும் உபயோகப்படுத்திக்கொள்கிறோம். "குடி அரசு" ஆசிரியருக்கு உண்மை நண்பர்களாயிருந்து வந்த ஸ்ரீமான்களான டாக்டர் வரதராஜுலு நாயுடு, திரு. வி. கலியாணசுந்தர முதலியார் முதலியவர்களின் கூட்டுறவு "குடி அரசு" க்குக் கிடைத்திருக்குமானால், அல்லது குறைந்தபக்ஷம் அவர்களுடைய எதிர்ப்பாவது இல்லாதிருந்திருக்குமானால் இன்னும் பெரிய மாறுதல் ஏற்பட்டிருக்கும். என்ன செய்வது? உள்ளதைக்கொண்டு திருப்தி அடைய வேண்டியதுதான்.

இவ்வருஷத்தில் "குடி அரசு"க்கு அதிக வேலை யிருக்கிறது. அதாவது, வரப்போகும் தேர்தலுக்காக ஸ்ரீமான் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள் சென்னைப் பிரசங்கத்தில் காங்கிரசின் பேரால் பிராமணர்களுக்கு ஓட்டு வாங்கிக் கொடுக்க ஊரூராய்க், கிராமம் கிராமமாய் தெருத் தெருவாய்த் திரிந்து தனது தொண்டை கிழியும் வரை (கிழிந்தாலுங்கூட) பிரசாரம் செய்யப் போவதாய் சொல்லியிருக்கிறார். ஸ்ரீமான் சி. ராஜகோபாலாச்சாரியார் மதுரையிலக்கின் பேரால் பிராமணர்களுக்கு ஓட்டு வாங்கிக்கொடுக்க, பத்திரிகைகளில் கோடு கட்டிய குறள்களை எழுதிக் கொண்டுவருகிறார்.

ஸ்ரீமான் எஸ். சீனிவாசய்யங்கார் தன் பணத்தினாலும், பட்டாபிஷேகங்கள் மகந்துகள்

## இந்தியா சட்ட சபையும் சென்னை பிராமணர்களும்.

ஆந்திரா காங்கிரஸ் கமிட்டியார்கள் இந்தியா சட்ட சபைத் தேர்தலுக்கு அபேக்ஷகர்களை நிறுத்தியாய்விட்டது. அதாவது மூன்று ஸ்தானங்களுக்கும் மூன்று பிராமணர்களையே நிறுத்தியாய் விட்டது. அவர்களின் பெயர்களாவன:—

1. வி. வி. ஜோகைய பந்துலு.
2. டி. பிரகாசம் பந்துலு.
3. சி. துரைசாமி அய்யங்கார்.

முதல் இரண்டு பேர்களும், தெலுங்குப் பிராமணர்கள். மூன்றாவதவர் தமிழ் அய்யங்கார் பிராமணர். ஆக மூன்றுபேரும் பிரா

பணத்திமிராலும், கஞ்சிக்கில்லாத பிராமணரல்லாத பிரசாரகர்களை நியமித்து விஷம பிரசாரம் செய்வதன்மூலமும் பிராமணர்களுக்கு ஓட்டு வாங்கிக்கொடுக்க உறுதிகொண்டிருக்கிறார். டாக்டர் நாயுடு அவர்களோ, எந்தக் கட்சி ஜெயிக்கும் எந்தக்கட்சி தோற்கும் என்று ஜோசியம் பார்த்துக் கொண்டிருக்கிறார்.

ஸ்ரீமான்கள் சக்கரைச் செட்டியார், சுரேந்திரநாத் ஆரியா, எஸ். இராமநாதன், தண்டபாணி பிள்ளை போன்றவர்கள் மனதில் மாத்திரம் வேகமாயிருக்கிறார்களே ஒழிய வெளியில்வந்து அவர்களைப்போல் வேலை செய்யக் கவலையில்லாதவர்களாயிருக்கிறார்கள். இந்த நிலைமையில் "குடி அரசு"க்கு இருக்கும் பொறுப்பையும் கஷ்டத்தையும் நினைத்துப் பாருங்கள்.

"குடி அரசின்" போக்கையும் அதன் தொண்டையும் விரும்புகிறவர்கள் இது சமயம் முன் வந்து உதவாவிடில் எதிர்பார்க்கும் பலனை அடைய முடியாது. அதாவது ஒவ்வொரு பட்டணங்களிலும் "குடி அரசு"க்கு கௌரவ ஏஜண்டுகள் முன்வரவேண்டும்.

அவர்கள் பத்திரிகையைத் தெருத் தெருவாய் விற்கவேண்டும். சந்தாதாரர்களைச் சேர்க்க வேண்டும். நமது முன்னேற்றத்திற்கு விரோதமான பத்திரிகைகளை விலக்கச் செய்ய வேண்டும்.

இனி ஒன்றிரண்டு மாதங்களுக்குள் ஆயிரம் இரண்டாயிரம் சந்தாதாரர்கள் அதிகமாகச் சேரவேண்டும். ஆங்காங்குள்ளவர்கள் கிராமம் கிராமமாய்ச் சென்று சந்தாதாரர்களைச் சேர்க்க வேண்டும்.

இது சமயம் பிராமண சூழ்ச்சிகளைத் தைரியமாய் வெளிப்படுத்த இரண்டே பத்திரிகைகள்தான் உழைத்து வருகின்றன. அதாவது "திராவிடன்" என்னும் தினசரியும் "குடி அரசு" என்னும் வாரத்திரமுமே யாகும். "திராவிடனு"ம் "குடி அரசு"ம் குறைந்தது கிராமத்திற்கு ஒன்றாவது போகும்படி வேலை செய்ய வேண்டும்.

பிராமணர்கள் தங்களை ஆதரித்து தங்களுக்கு ஓட்டுச் செய்யும்படி பிரசாரம் செய்ய ஒவ்வொரு முக்கிய பட்டணங்களிலும் பிராமணரல்லாதாரைக் கொண்டே பத்திரிகை ஏற்படுத்த முயற்சித்து வருகிறார்கள்; சில இடங்களிலும் ஏற்பாடாகி விட்டது இன்னும் பல இடங்களில் ஏற்படப் போகிறது. இதை உணருங்கள். இதற்குத் தகுந்தபடி நடவுங்கள்.

மணர்களேயாவார்கள். ஆந்திரா தேசம் சுமார் 10 ஜில்லாக்களை உடையது. இதில் நாற்பதைம்பது லக்ஷம் ஜனங்களுக்குமேல் மகமதியரல்லாதவர்கள்; அதாவது (பிராமணரல்லாத) இந்துக்கள் இந்த ஒன்றேமுக்கால் கோடி பிராமணரல்லாதவர்கள் அடங்கிய சமூகத்தில் இந்தியா சட்டசபைக்கு அபேக்ஷகராய் நிற்பதற்கு ஒரு பிராமணரல்லாதார் கூட கிடைக்கவில்லையென்றால், அதாவது இந்தியா சட்டசபைக்கு நிற்க ஒரு பிராமணரல்லாதாருக்குக்கூட யோக்கியதை இல்லை என்றால் இவர்கள் சுயராஜ்யம் அடைய எப்படி யோக்கியதை உடையவர்களாவார்கள்.

மகமதியர்களில் யோக்கியதை உள்ளவர்கள் இருக்கிறார்கள்; கிறிஸ்துவர்களில் யோக்கியதை உள்ளவர்கள் இருக்கிறார்கள்; ஆனால் பிராமணரல்லாத இந்துக்களில் மாத்திரம் யோக்கியதை உடையவர்கள் இல்லாமல் போய்விட்டார்கள். காரணமென்ன? மகமதியருக்கும் கிறிஸ்தவர்களுக்கும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதனால் அவர்களில் யோக்கியதை உள்ளவர்கள் இருக்கிறார்கள். பிராமணரல்லாதாருக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இல்லை. அதனால் அவர்களில் யோக்கியதை உடையவர்கள் இல்லை. இதுதான் காரணமா அல்லது வேறு ஏதாவது காரணம் உண்டா என்று "வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தைத் தொலைக்க கங்கணம் கட்டிக் கொண்டு தனது தொண்டையைக் கிழித்துக் கொள்ளத் தயாராயிருக்கும்" ஸ்ரீமான் முதலியார் அவர்களை வணக்கத்துடன் கேட்கிறோம்.

இனித் தமிழ் நாட்டின் கதி எப்படி இருக்கிறதோ! இன்னும் தெரியவில்லை. ஆனாலும் சென்னைக்கு ஸ்ரீமான் எஸ். சீனிவாசய்யங்கார், செங்கல்பட்டு தென்னாற்காடு இவைகளுக்கு ஸ்ரீமான் எம். கே. ஆச்சாரியார், மதுரை திருநெல்வேலி ராமநாதபுரம் இவைகளுக்கு ஸ்ரீமான் சேஷய்யங்கார்; இவரில்லாவிட்டால் வேறு ஒரு அய்யங்கார்; தஞ்சை திருச்சி இவைகளுக்கு ஸ்ரீமான் அ. ரங்கசாமி அய்யங்கார்.

கோயமுத்தூர், சேலம், நீலகிரி இவைகளுக்கு ஸ்ரீமான் ஆர். கே. ஷண்முகம் செட்டியார் பேர் அடிபடுகிறது. ஆனபோதிலும் "கலியுககர்ணனான" ஸ்ரீமான் சி. வி. வெங்கட்டரமணய்யங்காருக்கு கோயமுத்தூர் ஜில்லாவில் சென்னை சட்டசபைக்கு ஓட்டுக் கிடைக்காது, ஸ்ரீமான் இரத்தினசபாபதி முதலியார் ஜெயித்து விடுவார் என்ற சந்தேகம் வருமானால் ஸ்ரீமான் செட்டியார் பாடு ஆபத்துதான். சுயராஜ்யக் கட்சியில் இருந்து விலகியாவது இன்னொரு 2, 3 லக்ஷ ரூபாய் தர்ம விளம்பரம் செய்தாவது இந்தியா சட்டசபைக்கு நின்றுவிடுவார். அப்புறம் செட்டியார்பாடு மறுபடியும் ஜஸ்டிஸ்கட்சிக்குப்போகவேண்டியதுதான். இதன் முடிவு ஸ்ரீமான் சி.எஸ். இரத்தினசபாபதி முதலியார் கோயமுத்தூர் ஜில்லா போர்டு பிரசிடெண்டு எலக்ஷனில் பெறும் ஜெயம் அல்லது தோல்வியில் அடங்கியிருக்கிறது. ஆகவே இந்தியா சட்டசபைக்கு தமிழ்நாடு சார்பாக 4 அய்யங்கார் உறுதி, ஒரு அய்யங்கார் சந்தேகம். தமிழ் நாட்டில் இந்தியா சட்டசபைக்குப் போக யோக்கியதை உள்ளவர்கள் அய்யங்கார் ஜாதியார் தானா? பிராமணரல்லாதாரில் எவரும் இல்லையா? வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கிடைத்தால் இந்த ஸ்தானங்களுக்கு பிராமணரல்லாதார் நிற்காமல் காலியாகி சர்க்கார் நாமினேஷனுக்குப் போய்விடுமா என்று ஸ்ரீமான் முதலியார் அவர்களை கேட்கிறோம். சென்னை சட்டசபையைப் பற்றி பின்னால் எழுதுவோம்.

## ஒரு பெரிய உண்மையான நன்கொடை.

கொடுமுடியில் ஸ்ரீ சங்கர வித்யா சாலா என்ற ஹைஸ்கூல் ஒன்று சில கனவான்களின் தர்மத்தால் சில வருஷத்திற்கு முன் ஏற்படுத்தப்பட்டது. சிலகாலத்திற்குப் பிறகு ஷை ஊரில் தர்மப் பிரபுவான மகா-ா-ா-ஸ்ரீ பெரியண்ண செட்டியார் நமது தேசத்தின் கல்வி அபிவிருத்தியை உத்தேசித்து ஷை ஸ்கூலுக்கு 15,000 ரூபாய் பொறுமான 5 ஏக்கர் நஞ்சை பூமியும் ஸ்கூலுக்கு 8000 ரூபாய் பொறுமான கட்டிடமும் கட்டி வைத்தார். இப்போது அவர் ஒரு ஹாஸ்டல் எந்த ஸ்கூலுக்கும் முக்கியமென்றும் அஃதில்லாமல் பிள்ளைகளின் கல்வியும் ஒழுக்கமும் விருத்தியடையும் வழி மிகவும் கஷ்டமென்பதை உணர்ந்து அதிலும் பிராமணரல்லாத பிள்ளைகளுக்கே மிக்க வசதியேற்படுத்தி அவர்களை முன்னேற்ற வேண்டுமென்னும் சிந்தனையுடையவராய் ஒரு வேளாள ஹாஸ்டல் ஏற்படுத்தி அதில் இலவசமாக 12 பிள்ளைகளுக்கு சாப்பாடும், விடுதியும் கொடுத்து படிப்பிக்கும்படி 40,000 ரூபாய் பொறுமான சொத்தை செட்டில்மெண்ட் மூலியமாக ஸ்கூலுக்கு அளித்துள்ளார். ரூ. 12,000 ரொக்கமாக ஸ்கூலின் பண்டுக்கும் கொடுத்திருக்கிறார். ஹாஸ்டலின் கட்டிடத்திற்காக தனது சில வீடுகளையும் கொடுத்து மிக்கசிரத்தையுடன் ஷை தர்மங்களை நடத்திவர கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறார். அன்னார்போல் தேசாபிமானிகளும் தர்மப் பிரபுகளும் நம் தேசத்தில் முன்வரும் பக்ஷத்தில் நம்தேசம் கூடிய சீக்கிரம் முன்னேற்றம் அடைய என்ன தடை. வெறும் பேச்சில் காலத்தைப்போக்காது காரியத்தில் முயல வருபவரே முதன்மைத் தேசாபிமானியாவார். ஷை பெரியண்ண செட்டியார் கடவுளருளால் நீடூழிவாழ்ந்து வருவாராக.

K. சென்னிமலைக் கவுண்டர்,
பொக்கிஷதார்,
ஸ்ரீ சங்கர வித்தியாசாலா,
ஹைஸ்கூல், கொடுமுடி.

## மகாத்மாவின் நன்றியறிதல்.

சபர்மதியில் ராஜி ஒப்பந்தம் முடிந்தபிறகு ஸ்ரீமான். ஜெயக்கர் மகாத்மாவிடம் சென்று "இந்த ராஜியை உண்டுபண்ணியதிற்காக தங்களுக்கு நன்றி செலுத்துகிறேன்" என்று சொன்னாராம். அதற்கு மகாத்மா "நானும் உங்களுக்கு நன்றியுள்ளவனாயிருக்கிறேன்." என்று சொன்னாராம். மகாத்மா எதற்காக இந்த விஷயத்தில் ஸ்ரீ ஜெயக்கருக்கு நன்றி செலுத்தவேண்டும் என்கிற கேள்வி இதில் பிறக்கக்கூடும்---

அது எதற்கு என்று யோசிப்போமானால், சுயராஜ்யக் கக்ஷியார் உத்தியோகம் ஒப்புக்கொள்ளாத தன்மையின் பிரட்டுத்தனத்தை வெளியாக்கியதற்காகத்தான்.

## "குடி அரசு"க்கு நன்கொடை.

தேசபக்தர், திருவாளர்.

ஈ. வே. ராமசாமி நாயக்கர் அவர்களுக்கு,

ஐயா,

இச்சிங்கையிலுள்ள (1) கரிநு (2) கெய்ட்டி யெனப் பெயரையுடைய இரண்டுபடக் கூத்து மேடைகளிலும் வேலை செய்யும் கீழ்க்கண்ட தமிழ்ப் பிள்ளைகளிடம் வசூல் செய்ததும், வித்வான் கா. தாமோதரம் பிள்ளை யவர்கள் உதவியதுமான மொத்த வெள்ளி 32-89 க்கும் அன்றையதின மணியார்டர் விலைப்பிரகாரம் ரூ. 50---0---0 யும் 65 சென்ட் எனது சொந்தமாய் செலவிட்டு அனுப்பி யிருக்கிறேன். இதைப் பெற்று தங்கள் பத்திரிகைக்கு ரூ. 20---0---0 எடுத்துக்கொண்டு "ஆனந்த போதினி" பத்திரிகைக்கு ரூ. 5---0---0 சந்தாபோக பாக்கி ரூ. 25---0---0 யும் சுசீந்திரம் சத்தியாக்கிரக நிதிக்குத் திருப்பிக் கேட்டுக் கொள்ளுகிறோம். இதன் மூலம் எங்கள் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுவதன்றி யிதேபோல் தாழ்ந்த வகுப்பாரின் முன்னேற்றத்தில் அனுதாபமுள்ள சகல தமிழ்ச் சகோதரர்களையும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

| | வெள்ளி. | சென்ட் |
|---|---|---|
| திரு. வித்வான் கா. தாமோதரம் பிள்ளை. | 10. | 00. |
| ,, சி. நாதமுனி. | 10. | 89. |
| ,, ஆ. கே. கந்தசாமி நாயுடு. | 3. | 00. |
| ,, சி. குப்புசாமி. | 2. | 00. |
| ,, ஆ. அவத்தார்மைம். | 1. | 00. |
| ,, ப. வீரைய தேவர். | 1. | 00. |
| ,, சி. மாணிக்கம். | 1. | 00. |
| ,, ரா. கோ. வேணுகோபால் | 1. | 00. |
| ,, மன்டோர், நடேசன். | 1. | 00. |
| ,, பாலமுத்து. | 1. | 00. |
| ,, பழனிசாமி. | 0. | 50. |
| ,, கோவிந்தன். | 0. | 50. |
| ஆக மொத்தம். | 32. | 89. |
| மணியார்டர் செல. | 0. | 65. |

சி. நாதமுனி.

## ஸ்தல ஸ்தாபனங்களில் வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம்.

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமே தற்கால அரசியல் முறைக்கு ஏற்றதென்றும், வகுப்புப் பூசலும் சமயச் சண்டையும் இளம்பாமலிருப்பதற்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் நல்லவழியே ஏற்ற மருந்தென்றும் அறிஞர் பலரும் கூறுகின்றனர்.

சென்ற ஏப்ரல் மாதம் 10உ பெங்களூர் முனிசிபல் சபையார் இத்தகைய சிறந்த தொரு முடிவுக்கு வந்துள்ளார்கள். அச்சபையில் இனி எவரேனும் ஓர் எஞ்சினீர் நியமனஞ் செய்யப் படுவாரெனின் அவர் பிராமணரல்லாதவரா யிருத்தல் வேண்டுமென தீர்மானமொன்று கொண்டுவரப்பட்டு பல பார்ப்பனர்களின் எதிர்ப்புக்கிடையே நிறைவேறியது. மற்ற நகர சபைகளுக்கெல்லாம் ஓர் வழிகாட்டியாய் நடந்து கொண்ட பெங்களூர் நகர சபையைப் போற்றுகிறோம். நம் நாட்டிலுள்ள இதர முனிசிபல் சபை, ஜில்லா போர்டு போன்ற ஸ்தல ஸ்தாபனங்களும் பெங்களூர் நகர சபையைப் போன்று உத்தியோகம் நியமிப்பதில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தைக் கையாடினால் பெரிதும் நலம் பயக்குமென்று கூறுகிறோம்.

நாட்டிலே தற்காலம் வகுப்புப் பகை வளர்ந்து வருவதற்குக் காரணம் சமூகவாரியாக உத்தியோகம் நல்கப் படவில்லை என்பது பற்றியேயாகும். ஆகலான் தற்காலம் குடிமக்கள் கையிலிருக்கக் கூடிய ஸ்தல ஸ்தாபனங்கள் அனைத்தும் பெங்களூர் முனிசிபல் சபைபோன்று சமூகவாரியாக உத்தியோகம் நல்கி சகலரும் ஒத்துவாழ வழி தேடுமென நம்புகிறோம்.

## மதிப்புரை.

### "சமத்துவ ஊழியன்."

நாடு செழிக்க, ஒற்றுமை விரவ அந்நாட்டிடை வாழும் மக்களுக்குள் சமத்துவ உணர்ச்சி மல்க வேண்டுமென்பது ஒருதலை. சமத்துவ உணர்ச்சி பெருகினால் ஒற்றுமை தானே மக்களுள் குடிகொண்டுவிடு மென்பதும், ஒற்றுமை ஏற்பட்டபின்னர் சுயராஜ்யத்திற்காக வருந்தித் தவங்கிடக்க வேண்டிய அவசியமே ஏற்படாது என்பதும் நாம் மட்டிலும் கூறும் மொழிகளல்ல; சமத்துவங்கோரி இடையறாது உழைத்துவந்த பெரியார் பலரது கருத்துமேயாகும்.

இத்தகைய சமத்துவம் நாடி பத்திரிகை வாயிலான் உழைக்க முன்வந்த கொழும்பு திருவாளர். வீ. அருணாசலம் அவர்களைப் போற்றுகிறோம். இவரால் நடாத்தப்பெறும் "சமத்துவ ஊழியன்" என்னும் மாதவெளியீடு முதலாம் இதழ் கிடைக்கப்பெற்றோம். இப்பத்திரிகையில் பல சிறந்த செம்பொருட் கட்டுரைகள் பொலிவுற்று விளங்குகின்றன. தமிழரனைவரும் "சமத்துவ ஊழியனை" ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். "அஞ்சா நீதியே அழியா வாழ்வு" என்ற ஜெய பேரிகையுடன், வறுமைக்குள் குமிழியிட்டு வாழும் பாம ஏழைகளின் கோழனாய், "சமத்துவமே எனது உயிர், சமத்துவமே எனது மதம், சமத்துவமே எனது தெய்வம்" என்ற முழக்கத்

## கோவை ஜில்லா கம்ம மகா ஜனங்கள் சமூகம்.

### இரண்டாவது கம்ம மகா நாட்டினை (கான்பரன்ஸ்) கூட்டுவதற்காக ஆலோசனை அழைப்புப் பத்திரிகை.

பெரியோர்களே, இப்பொழுது நமது சமூகத்தின் இரண்டாவது கம்மவார் மகா நாடு-(கான்பரென்ஸ்) அடுத்த மே மாதத்தில் நடத்த வேண்டியிருப்பதால் அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டியிருக்கின்றன.

அவையாவன:---1. மகா நாடு கூடும் இடம். 2. மகா நாடு கூடும் தேதி. 3. அக்கிராசனர் நியமனம். 4. உபசாரணைச்சபை அமைத்தல். 5. உபசாரணைச்சபைத் தலைவரைத் தெரிந்தெடுத்தல்.

முதலிய பல நடவடிக்கைகளைப்பற்றி ஆலோசித்து ஓர் முடிவிற்கு வர வேண்டியிருப்பதால், கோயமுத்தூர் ஜில்லாவின் எல்லாக் கிராமங்களிலிருந்தும் ஒருவருக்குக் குறையாமல் நமது பிரதிநிதிகள் விஜயஞ் செய்து, மேடி மகா நாடு கூட்டும் ஆலோசனைக்கு வேண்டிய நடவடிக்கைகளைக் கூற வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

இவ்வாலோசனைக் கூட்டம் பூளைமேடு சர்வஜன ஹைஸ்கூலில் 1926-௵ மே மாதம் 9-உ ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு கூடப்பெறும். அப்பொழுது பெரியோர்கள் அனைவரையும் விஜயஞ் செய்ய வேண்டுகிறோம்.

இங்ஙனம்,

நிர்வாக உத்தியோகஸ்தர்கள்.

சபைத்தலைவர்

மகா-ா-ா-ஸ்ரீ P. S. G. கெங்கா நாயுடு அவர்கள், மேனேஜிங் ஏஜண்டு ஸ்ரீ ரங்க விலாஸ் மில்ஸ், பூளைமேடு.

உதவி சபைத்தலைவர்

,, N. இராமகிருஷ்ணம நாயுடு அவர்கள், அத்திப்பாளையம்.

கார்யதரிசிகள்.

,, P. S. வேணுகோபால் நாயுடு அவர்கள், பூளைமேடு.

,, A. ராமசாமி நாயுடு அவர்கள், இடிகரை.

பொக்கிஷாதிபதி

,, V. ரங்கசாமி நாயுடு அவர்கள், மேனேஜிங் ஏஜண்டு, ராதா கிருஷ்ணமில்ஸ். பூளைமேடு.

தொடன் இளம்பும் இப்பத்திரிகை தனது போரில்வெற்றி பெறுமாக.

வருட சந்தா 1--8--0.

"சமத்துவ ஊழியன்" காரியஸ்தர், 52. செட்டித்தெரு, கொழும்பு.

## பிராமண அகராதி.

### வினா—விடை.

வினா:—ஆச்சிரமம் என்றால் என்ன?

விடை:—காந்தர்வ விவாகமும் ராக்ஷஸ விவாஹமும் நடக்குமிடங்கள்.

வினா:—சுயராஜ்யம் என்றால் என்ன?

விடை:—பிராமணர்கள் உத்தியோகமும் பதவியும் அதிகாரமும் பெறுவதுதான் சுயராஜ்யம்.

வினா:—பிராமணரல்லாதார்களுக்கு உத்தியோகமும் பதவியும் அதிகாரமும் வந்தால் அதற்குப் பெயரென்ன?

விடை:—அது அதிகாரவர்க்கத்தின் ஆட்சி அல்லது அன்னிய ஆட்சி.

வினா:—தேச சேவை யென்றால் என்ன?

விடை:—பிராமணர்கள் பின்னால் திரிந்து கொண்டு ஜஸ்டிஸ் கக்ஷியைத் திட்டுவது போல் பிராமணரல்லாதாரை திட்டுவதும் பிராமணர்களிடம் பணம் வாங்கிக்கொண்டு அவர்களை, 'தலைவர்' 'தமிழ்நாட்டுக் கர்ணன்' கலியுகக் கர்ணன்' மகாத்மாவின் சிஷ்யர்' என்று சொல்லி பிராமணரல்லாதாரை வஞ்சித்து பிராமணர்களுக்கு ஓட்டு வாங்கிக் கொடுப்பதுதான் தேச சேவையாகும்.

வினா:— தேசத் துரோகமென்றால் என்ன?

விடை:— பிராமணரல்லாதார் நன்மையைப் பற்றி பேசுவதும் எழுதுவதும் தேசத் துரோகமாகும்.

வினா:—பிராயச்சித்தமில்லாத, மன்னிக்கமுடியாத தேசத் துரோகமென்றால் என்ன?

விடை:— பிராமணர்களுடைய சூழ்ச்சிகளையும் தந்திரங்களையும் அயோக்கியத்தனங்களையும் வெளியிலெடுத்துச் சொல்லுவதும் எழுதுவதும் மன்னிக்க முடியாத துரோகமாகும்.

வினா:— மதுவிலக்குப் பிரசாரம் என்றால் என்ன?

விடை,— தான் மதுவை நுகர்ந்துகொண்டும் தனதுமாதத்தில் கள்ளுமுட்டி கட்டித் தொங்க விட்டுக்கொண்டும் தனது பத்திரிகையில் ஒவ்வொரு மனிதனும் வீட்டில் சாராயம் வைத்திருக்க வேண்டுமென்று எழுதிக் கொண்டும், தன்னை சட்டசபைக்கு அனுப்பினால் மதுவை ஒழித்துவிடுகிறேன் என்று சொல்வதும், இப்படிப்பட்டவர்களுக்குஓட்டுக்கொடுங்கள் என்று சொல்வதும் மதுவிலக்கு பிரசாரமாகும்.

வினா:—சரியான ஜனப்பிரதிநிதி சபை என்றால் என்ன?

விடை:— எல்லோரும் பிராமணர்களாய் அமர்ந்திருப்பதுதான் சரியான ஜனப்பிரதிநிதி சபையாகும்.

வினா;— அடுத்தபடியான ஜனப் பிரதிநிதி சபை யென்றால் என்ன?

விடை:— பிராமணர்களும், அவர்கள் சொல்படி கேட்கும் பிராமண ரல்லாதவர்களும் அமர்ந்திருப்பது இரண்டாந்தர ஜனப்பிரதிநிதி சபையாகும்.

வினா:— ஜனப்பிரதிநிதி இல்லாத சபை என்றால் என்ன?

விடை:— பிராமணர்கள் மெஜாரிட்டியாய் இல்லாத சபை எவ்விதத்திலும் ஜனப்பிரதிநிதி சபையாகமாட்டாது.

வினா:— புத்தியுள்ள ஜனங்கள் என்றால் யார்?

விடை:— பிராமணர்கள் வண்டி வண்டியாய் பொய்யும் புளுகும் அளந்தாலும் அதையெல்லாம் கேட்டுக்கொண்டு சரி சரி யென்று பேசாமல் இருப்பவர்கள் புத்தியுள்ள ஜனங்கள்.

வினா:— குழப்பக்காரர்கள் காலிகள் என்றால் யார்?

விடை:— பிராமணர்கள் வண்டி வண்டியாய் பொய்யையும் புளுகையும் அளக்கும்போது குறுக்கே யாராவது கேள்வி கேட்டால் அவர்கள் காலிகள், குழப்பக்காரர்கள் ஆகிவிடுவார்கள்.

வினா:—தேசியப் பத்திரிகை என்றால் என்ன?

விடை:— பிராமணர்களின் படம் போட்டுக்கொண்டும் பிராமணர்களைத் தலைவர் என்றும் பிராமணர்கள் கட்சிக்கு ஓட்டுக் கொடுங்கள் என்றும் பிராமணர்களை புகழ்ந்து எழுதிக்கொண்டும் தேவஸ்தான சட்டத்தையும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தையும் கண்டித்துக் கொண்டும் அல்லது அதைப்பற்றிப் பேசாமல்வாயை மூடிக்கொண்டும் இருக்கிற பத்திரிகைகள்தான் தேசியப் பத்திரிகைகள் ஆகும்.

வினா:— தேசத் துரோகப் பத்திரிகை என்றால் என்ன?

விடை:—பிராமணர்களின் தந்திரங்களை எடுத்து எழுதுவதும் பிராமணரல்லாதார்களின் பெருமையைப்பற்றி எழுதுவதும் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தையும் தேவஸ்தான சட்டத்தையும் ஆதரித்து எழுதுவதுமான பத்திரிகைகள் தேசத் துரோகமான பத்திரிகைகளாகும்.

## சித்தர் திருநாள்.

சேலம் தமிழ் சித்த வாகட வைத்திய சங்கத்தில் காளது சித்திரை-மீ 15-உ சிலரது பொருளுதவி பெற்று சித்தர்களுக்கு பூஜை செய்வித்து, ஓங்காரம் பச்சிலை அமைக்கப்பெற்ற காவிக்கொடியுடன் ஸ்ரீ சுப்பிரமணியக் கடவுளின் திருவுருவப்படத்தை வாத்திய கோஷத்துடன் நகர்வலம் கொண்டு வந்து, ஸ்ரீ சுப்பிரமணியக் கடவுளின் திருவுருவப்படத்தின் அக்கிராசனத்தின் கீழ் "மானிடர் கடங்களுக்கு ஜீவன் முக்தி அவசியம்" மென்பது பொருள் பற்றி திரு எம். பார்த்தசாரதி முதலியார் அவர்கள் ஓர் சொற்பெருக்கு நிகழ்த்தினர். திரு. மாணிக்கம்பிள்ளை அவர்களால் வந்தனோபசாரம் கூறப்பெற்று, புஷ்ப சந்தனம் வழங்கப்பெற்று கூட்டம் நிறைவுற்றது. பிரதி சனி வாரந்தோறும் ஷை சங்க நிலயத்தில் வைத்திய விஷயமான உபந்நியாசங்கள் நடைபெறுமென திரு. எஸ். ஆர். மாணிக்கம் பிள்ளை நமக்கு அறிவிக்கிறார்.

## "நவசக்தி" யின் துக்கம்.

"சுயராஜ்யக்கட்சி அழிந்து ஒழிய வேண்டுமென்பது திரு. ராஜகோபாலாச்சாரியாரின் கருத்தெனத் தெரிய வருகிறது" என்று "நவசக்தி" தன் 30-4-26-ஏ தலையங்கத்தில் துக்கப்பட்டு ஆச்சாரியார் மீது சீறுகிறது. சுயராஜ்யக்கட்சியின் தோற்றத்தால் காந்தியடிகள் ஒடுங்கினர், ஒற்றுமை குலைந்தது, ஒத்துழையாமை மறைந்தது, வகுப்புப்பூசல் கிளம்பியது என்று சதா ஓலமிட்டுக் கொண்டிருந்த "நவசக்தி"க்கு இப்பொழுது சுயராஜ்யக் கட்சி ஒழிந்து போவதில் இவ்வளவு கவலை ஏற்பட்டதற்குக் காரணம் தெரியவில்லை. சுயராஜ்யக்கட்சி ஒழிந்தால் உலகம் முழுகிப்போகுமோ அல்லது "நவசக்தி"க்கு செல்வாக்குக் குறைந்துபோகுமோ என்கிற இரகசியத்தை நாம் அறியவில்லை.

## புது இறக்குமதி

இந்தியாவுக்குப் புதிதாக ஒரு கவர்னர் உத்தியோகம், ஒரு லார்ட் பட்டம், ஒரு ரைட் ஆனரபிள் பட்டம், ஆக மூன்று புதுமைகள் இறக்குமதி ஆகிவந்தது. அந்த மூன்றும் பிராமணர்களுக்கே போய்விட்டது. அதாவது S. P. சின்ஹா லார்ட் சின்ஹா, ரைட் ஆனரபிள் சீனிவாச சாஸ்திரி ஆகிய மூன்று பிராமணர்களுக்கும். பிளேக்கோ, இன்புளுவென்சாவோ, எக்ஸ்சேஞ்சு நாணய மாற்று பஞ்சமோ முதலிய புதுவியாதிகள் இறக்குமதியானால் அது முழுமையும் பிராமணரல்லாதாருக்குத்தான் கிடைக்கிறது. பிராமணரல்லாதாரின் பாக்கியமே பாக்கியம்.

### "தேச சேவை"

"தேச சேவை" என்னும் பெயர்கொண்ட தமிழ் வாரப்பத்திரிகையொன்று சித்திரங்களுடனும் பல முக்கிய விஷயங்களுடனும் மே மாதம் 2-வது வாரம் முதல் கொண்டு தாம் வெளியிடப்போவதாகவும் அது எவ்வித ராஜீயக் கட்சியிலும் சேராமல் பொது ஜன சேவையையே பிரதானமாய்க்கொண்டு உழைக்குமென்றும் அதன் சந்தா ரூ. 4-0-0 என்றும் ஸ்ரீமான் எஸ். தாமஸ் பாலய்யா பிள்ளை ஒரு அறிக்கையை நமக்கு வெளியிட அனுப்பியுள்ளார் ஆதலால் இதை ஆதரிக்க கோருகிறோம்.

### மாயவரத்தில் மும்மூர்த்திகள்.

சிலதினங்களுக்கு முன் பாக மாயவரத்தில் மும்மூர்த்திகள் வந்து சபை கூடி ரகசிய யோசனைகள் செய்து முடிவான தீர்மானங்கள் செய்து கொண்டு போயிருக்கிறார்கள். அவர்கள், 1 ரைட் ஹானரபில் சீனிவாச சாஸ்திரியார், 2. சட்ட மெம்பர் சர். சி. பி. ராமசாமி ஐயர், 3 அட்வகேட் ஜெனரல் கனம் வெங்கட்டராம சாஸ்திரியார் ஆகிய மூவருமே யாகும். இந்த மும்மூர்த்திகளும் சேர்ந்து தற்காலநிலைமையில்பிராமணர்கள்எப்படிஉத்தியோகங்கள் பெறுவது, பிராமண வக்கீல்கள் இனி எப்படி பிழைப்பது, பிராமணரல்லாதார்களை ஏய்ப்பதற்கு வழி யென்ன என்று யோசித்து முடிவு செய்துகொண்டு போயிருக்கிறார்களென்றே நினைக்கிறோம். எல்லாம் ரகசியத்திலேயேயிருக்கிறது. குதிரை எப்பொழுது முட்டையிடுமோ பார்ப்போம்.

பொள்ளாச்சி தாலூகா நெகமம்

# ஆரம்ப ஆசிரியர்கள் மகா நாடு.

7—4—26.

கோயமுத்தூர் ஸ்ரீமான் ராவ் சாஹிப் C. S இரத்தினசபாபதி முதலியாரவர்களின் அக்கிராசனப் பிரசங்கத்தின் சுருக்கம்.

(சென்றவாரத் தொடர்ச்சி.)

## ஆரம்பக் கல்வி முறை.

ஆரம்ப பாடசாலையில் தமிழ் மொழி தான் கற்பிக்கவேண்டும். என், எழுத்து வாசகம் இவைகளில் மாணாக்கன் தேர்ச்சி பெற வேண்டும். பூமி சாஸ்திரம், தேச நிலை, சன்மார்க்கம், மதபோதனை, கணிதம் இவைகள் கற்பிக்கவேண்டும். அந்தந்த கிராமத்துக்குத் தக்கபடி பாடம் அமைக்க வேண்டும். அவசியம் தொழிற் கல்வி வேண்டும், நெசவுத் தொழில் கற்பிக்க வேண்டும். இவைகளை தாலூகா போர்டார் கவனிக்கவேண்டும்.

## ஆசிரியர்கள் பொருப்பு.

ஆசிரியர்கள் பொருப்பு அதிகம் வேண்டும். எல்லா வழிகளிலும் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு நன்மையாக நடந்து வழி காட்டவேண்டும். கிராமங்களின் நன்மை தீமைக்கு உபாத்தியாயர்கள்தான் பொருப்பாளிகளாகும். அகிம்சா தர்மத்தால் விரோதிகளையும் வசப்படுத்தலாம். உங்களிடம் அடக்கம், பொறுமை, இன்சொல், சுயநல மறுப்பு, தாராள நோக்கம் இவைகளிருக்குமானால் நீங்கள்தான் கிராமத்தில் தலைவர்களாக விளங்குவீர்கள். உங்கள் அறிவை விருத்திசெய்துகொண்டேயிருக்கவேண்டும் இலக்கணம் இலக்கியம் கற்றுக்கொள்வதில் நீங்கள் மாணவர்களாகவே நினைத்துக் கொள்ளவேண்டும். போதனாமுறை தெரிந்து சர்ட்டிபிகேட் பொராவிட்டாலும் அவர்களை சமமாகக் கவர்ன்மெண்டார் நடத்தவேண்டும். நம் ஜில்லாவில் போதனாமுறை பாடசாலை ஏற்படவேண்டும். உடுமலைப்பேட்டையில் ஒரு போதனாமுறை ஸ்கூல் ஏற்படுத்த டிபார்ட்டுமெண்டார் ஏற்பாடு செய்வதாகத் தெரிகிறது.

## ஆசிரியர்களின் நிலைமை,

ஆசிரியர் உத்தியோகம் புண்ணியமும் கண்ணியமும் வாய்ந்தது. அதற்குக் கிடைக்கும் ஊதியம் உங்களுக்கு மிகச் சொற்பமே. உங்கள் குடும்பத்துக்கு 15 நாள் செலவுக்கு உங்கள் சம்பளம் போதாது. ஆதலால் நீங்கள் வேறு எதாவது உபதொழில் செய்ய வேண்டிவருகிறது. பிறர் தூண்டுதலுக்கு தாக்ஷண்யத்தால் மனச் சாக்ஷியை இழக்க வேண்டிய சமயங்கள் உங்களுக்கு நேரும். நீங்கள் உங்கள் மேன்மையையும் சத்தியத்தையும் எண்ணி தன் னலத்தியாகத்திற்கும் தயாராயிருக்கவேண்டும். அப்பொழுது தான் நன்மையடைவீர்கள்.

## திரவிய சகாயம்.

உங்கள் குறைகள் அநேகம் என்பது எனக்கு தெரியும். உங்கள் நன்மையை நாடுபவர் சிலரே. 5 வருஷத்துக்கு முன் உங்களுக்கு 30 ரூபாய் சம்பளம் கொடுக்கலாமென்று நாப் துரை சிபார்சு செய்தும் சர்க்கார் அதை ஒப்புக் கொள்ளவில்லை. ஞாயமாக உங்களுக்கு 40 ரூபாய் சம்பளமாவது கிடைப்பது ஞாயம். நீங்கள் 5 வருஷத்திற்கு முன் உங்களுக்கு 30 ரூபாய் கொடுக்கலாமென்று கமிட்டியார் தீர்மானித்ததையாவது மீண்டும் கேட்கலாம். போதனாமுறை பயிலாதவர்களுக்கு 10 ரூபாயும் பயின்ற லோயர் கிரேடுக்கு 15 ரூபாயும் ஹையர் கிரேடுக்கு 20 ரூபாய் மாதகிராண்டு கொடுத்தால் கிராண்டு பாடசாலைகள் நடைபெறும். பிராவிடெண்டு பண்டு உங்களுக்கு பிற்காலத்திற்கு நன்மை பயக்கும்.

## ஆசிரியர்கள் உரிமை.

உங்கள் உரிமையைக் காப்பாற்றுங்கள் சுதந்திரமும் சுயராஜ்யமும் வேண்டுமெனக் கிளர்ச்சிததும்பும் இக்காலத்தில் நீங்கள் ஏன் தூங்கவேண்டும். கல்வி சம்பந்தப்பட்ட எல்லா பொதுசபைகளிலும் உங்களுக்கு உரிமை வேண்டும். ஜில்லாக்கல்வி சபையில் நீங்கள் ஏன் மெம்பராயிருக்கக் கூடாது. எல்லா முனிசிபால்ட்டி, தாலூக்கா போர்டு, கிராம பஞ்சாயத்து எல்லா சபைகளிலும் உங்களால் தேர்ந்து எடுக்கப்பட்ட உங்களுடைய பிரதிநிதிவேண்டும். அம்மாதிரியிருப்பின் அவர்கள் உங்கள் நலத்தைக் கருதுவார்கள்.

## கிளர்ச்சி தேவை.

உங்கள் எண்ணம் நிறைவேற நீங்கள் வெறும் தீர்மானம் செய்தால் பலன்தராது நீங்கள் ஒற்றுமையுடனிருந்து ஜில்லா பூராவும் சேர்ந்து மத்திய சபை ஒன்று ஏற்படுத்தி அதன் சார்பாக பலத்த கிளர்ச்சி செய்து வருவீர்களானால் உங்கள் உரிமையைப்பெறுவீர்கள். நீங்கள் கட்டுப்பாடாக முயர்ச்சி செய்யவேண்டும். உங்கள் ஒழுக்கத்தாலும் அன்பாலும் அடக்கத்தாலும் நீங்கள் செல்வாக்குள்ள பலரைத்துணையாகப்பெறுவீர்கள் என்னுடையஇயன்ற உதவியை எப்பொழுதும் நீங்கள் பெறத்தடையில்லை.

## முடிவுரை.

நெடுநேரம் பேசிவிட்டேன். பிரசங்கப் பழக்கம் எனக்கில்லை 15 வருஷமாக உங்களோடு பழகிய அநுபோகத்தையே பேசினேன். அன்பால் உங்கள் கடமைகளை வற்புறுத்திப் பேசியிருப்பேன். வித்தியாசமாக எண்ணாதீர்கள். உங்கள் மேம்பாடே எனது முக்கிய நோக்கம். உங்கள் குறையை நான் தெரிந்திருப்பினும் உங்களால் கேட்கவேணுமென்றே வந்தேன். மகாநாட்டு நடவடிக்கைகளை ஆரம்பம் செய்யுங்கள், வரும் காலத்தில் மக்களின் நன்மை தீமைக்கு நீங்கள்தான் ஜவாப்தாரிகள். ஆதலால் யோசித்து தீர்மானங்கள் செய்புங்கள். மக்கள் பக்குவப்படவும் ஜாதிமத பேதமின்றி நாட்டின் நன்மைக்குழைக்கவும் தமிழ் மொழியை வளர்க்கவும் உங்கள் முயற்சி பலிக்கவும் நீங்கள் முயற்சி செய்வீர்களானால் இறைவனருளால் உங்களுக்கு எல்லா நன்மையும் உண்டாகும்.

---

"குடி அரசு" பத்திராதிபர் அவர்களுக்கு.

அன்புமிக்க ஐயா,

நான் தங்கள் 'குடியரசு' ஏற்பட்டநாள் முதலாக தவறாது தங்கள் பத்திரிகையைப் படித்துவருகிறேன். அத்துடன் 'தமிழ் நாடு,' 'திராவிடன்', 'அகிலபானு', சுயஜாதி மித்திரனாகிய 'சுதேசமித்திரன்' முதலியபத்திரிகைகளையும் தொடர்ந்து படித்து வருகிறேன். தமிழ்நாட்டில் தங்கள் 'குடியரசு' ஒன்றுதான் உண்மையாக தமிழர்களுடைய சமத்துவத்திற்குப் பாடுபட்டு வருகிறது. தங்கள் பத்திரிகை 2-வாரங்கள் நின்றுபோனதையும் நின்றதற்கு சமாதானம் சென்றவாரம் தாங்கள் எழுதியிருந்ததையும் கவனித்தேன் ஏன் செய்வது "நல்லகாரியத்திற்கு நாற்பது இடையூறு" என்பது பொய்யாகுமோ? தங்கள் பத்திரிகை ஒன்று இன்றேல் பிராமணர்கள் செய்யும் சூழ்ச்சிகளை உள்ளது உள்ளபடி வெளியாகாது. இத்தனை தெளிவாய் தைரியமாய், நேரில் பிரசங்கம் செய்வது போல் தாங்கள் எழுதிவருவதை நான்மட்டுமல்ல, எனது நண்பர்கள் பலரும் படித்து உண்மை அறிந்து கொள்ளுகிறோம். சில சமயங்களில் ஒரு வியாசத்தைப் பலதடவை படிப்பதும் உண்டு. தாங்கள் சொல்லுவதுபோல் பார்ப்பனர்கள் செய்யும் சூழ்ச்சிகளை அறிந்தும் அவர்களை ஆதரிப்பது பயங்கொள்ளித்தனமாகும். தாங்கள் உண்மைகளை தைரியமாய் எடுத்துரைப்பது பற்றி நாங்கள் மிகவும் சந்தோஷப்படுகிறோம்.

ஒரு தாலூகா காங்கிரஸ் காரியதரிசி.

# சென்னை சட்ட சபைத் தேர்தல்.

இவ் வருஷம் அக்டோபர் மாதம் நடைபெறவிருக்கும் சென்னை சட்ட சபைத் தேர்தலுக்கு, சேலம், கோயமுத்தூர், வட ஆற்காடு ஆகிய நான்கு ஜில்லாக்களிலுள்ள ஜெமீன்தார்கள் தொகுதிக்கு குமாரமங்கலம் ஜெமீன்தார் திருவாளர் பி. சுப்பராயன் அவர்கள் ஒரு அபேக்ஷகராய் நிற்பதாக நமக்கு அறிவிக்கிறார்.

(இரண்டாம் பக்கத்தின் தொடர்ச்சி)

உணவின்றி கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்ற ஆயிரக்கணக்கான ஏழைமக்களுக்கு உண்ணுவதற்கு வயிறார உணவு கிடைக்கும்.

## மதுவிலக்கு.

நம் நாட்டில் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் குடியினால் சீர்கெட்டுவருகின்றன. ஏழைத் தொழிலாளர்கள் தங்களுக்குக் கிடைக்கின்ற சொற்பமான கூலியை மதுபானம் செய்வதில் செலவிட்டு தங்களது குடும்பத்தினரைத் தாங்கொணுந் துன்பத்திற்கு ஆளாகும்படி செய்துவருகின்றனர். குடியே நாட்டில் ஏற்படுகின்ற பலவித தீமைகளுக்குக் காரணமாக இருக்கின்றது. எனவே இந்தக் கெட்ட வழக்கத்தை ஒழிக்கும் விஷயத்தில் இளந் தமிழர்கள் தீவிரமாக உழைத்தல் வேண்டும்.

## தீண்டாமை.

தீண்டாதார்களென்று நாம் நமது வகுப்பைச் சேர்ந்த பலரை ஒதுக்கி யிருப்பது நமதுமுற்போக்கிற்கே பெருந்தடையாக இருக்கின்றது. தீண்டாதவர்கள் எனப்படுவோரைக் கேவலமாக தமிழ் நாட்டவர்கள் இனி நடத்தவே கூடாது. அவர்களைச் சீர்படுத்தி முன்னேற்ற மடையும்படி செய்ய இளந்தமிழர்கள் உழைத்தல் வேண்டும். பொது ரஸ்தாக்களிலும், பொது இடங்களிலும், கோயில்களிலும் அவர்கள் செல்லுவதற்குத் தாராளமாக அனுமதிக்கப்படவேண்டும். தீண்டாமையை ஒழிக்கும் விஷயத்தில் இளந்தமிழர்கள் வேண்டிய காரியங்களைச் செய்தல் வேண்டும். தீண்டாமையையே தமிழ் நாட்டிலிருந்து நீக்கிவிடுவதற்கு அவர்கள் ஒரு பெரிய போராட்டத்தை ஆரம்பித்து நடத்தவேண்டும்.

## தமிழ் இளைஞர் சங்கம்.

தமிழ் நாட்டில் உள்ள தமிழ் இளைஞர்கள் அனைவரையும் இந்தச் சங்கத்தில் சேர்த்துக்கொள்ளும்படி செய்து அவர்களைத் தமிழ் நாட்டின் முன்னேற்ற விஷயத்தில் சில வாக்குத்தத்தங்களை செய்து கொள்ளும்படி செய்யவேண்டும். தமிழ் இளைஞர்கள் நடத்துகின்ற தமிழர் இயக்கத்திற்கும் தற்காலத்தில் நடைபெற்றுவரும் ராஜீய இயக்கத்திற்கும் யாதொரு தொடர்பும் கூடாது. ராஜீயவேலைகளைச் செய்ய விரும்புகின்ற தமிழ் இளைஞர்கள், தமிழர் இயக்கத்தின் பேரை வைத்துக்கொண்டு ராஜீய வேலைகளில் கலந்துழைக்கவேகூடாது.

## எனது வேண்டுகோள்.

தமிழ்நாடு சம்பந்தப் பட்டவரையில் தமிழர்இயக்கம் மிகவும் அவசியமானது இந்த இயக்கத்தை நடத்துவதற்கு தமிழ் இளைஞர்களாகிய உங்களால் தான் முடியும். நீங்கள் எச்சமயத்திலும் உங்களது பொறுமையை இழந்துவிடக் கூடாது. இறுதியாகத் தமிழ்நாடு எங்கணும் தமிழர் சங்கங்களை ஏற்படுத்தி தமிழர் இயக்கத்தைச் சிறப்பாக நடத்துமாறு நான் உங்களைப் பன்முறையும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

---

## கும்பகோணம் ஜில்லாவில் காங்கிரஸ் பார்ப்பனர்கள் செய்யும் சூழ்ச்சிகள்.

அளவிடற்பாலன.

---

சென்றவருஷம் நடந்த தலைப் போராட்டம் ஏற்பட்டது முதல் இங்குள்ள தமிழர்கள் விழித்துக்கொண்டனர். காங்கிரஸ் கமிட்டிகளில் பிராமணர்களுக்கு விசேஷமாய்ப் பதவிகள் ஒன்றும் கிடையாது. அவர்களுக்கு உடந்தையாக இருக்கும் தலையாட்டிப்பொம்மைகளும் கிடையாது ஜில்லாக் கமிட்டியும் தமிழர்களாலேயே கைப்பற்றப் பட்டிருக்கிறது. இதைக்கண்ட பார்ப்பனர்கள் இவர்கள் செல்வாக்கைக் குறைத்துவிடப் பல சூழ்ச்சிகள் செய்துவருகின்றனர் நிர்வாகிகளை ராஜிநாமா செய்யும்படி தூண்டிவருகின்றனர். இவர்கள் வலையில் அகப்படாத சிலரை கமிட்டியிலிருந்து விலக்கிவிடவும் தீர்மானம் செய்துவிட்டனர். நன்னிலம் தாலுகா கமிட்டி ஒன்று தவிர பாக்கி தாலுக்கா கமிட்டிகளும் ஜில்லா கமிட்டியும் தமிழர்கள் நிர்வாகத்திலேயே இருக்கிறது யாவரும் பிராமணர் அல்லாதார் என்ற காரணத்தினாலேயே மகாணகமிட்டியார் ஒருகமிட்டிக்கும் பணஉதவி செய்வதில்லை சில கமிட்டிகளுடன் கடிதப்போக்கு வரவுகள்கூட வைத்துக் கொள்வதில்லை. மாயவரம் முனிசிபாலிடியில் ஸ்ரீமான் டாக்டர் வரதராஜுலு நாயுடுவிற்கு உபசாரப்பத்திரம் வாசித்துக் கொடுக்கக்கூடாதென இரு பார்ப்பன கவுன்சிலர்கள் ஆட்சேபணை செய்தனர். சர்க்காருக்குத் தந்தி கொடுத்தனர். முடிவு என்ன ஆயிற்று டாக்டர் நாயுடுக்கு மூன்று முனிசிபாலிடிகளிலும் உபசாரப் பத்திரங்களும் படித்துக் கொடுக்கப்பட்டன. முனிசிபாலிடியும் டாக்டர் நாயுடுவின் கொள்கையை ஆதரிப்பதாய் உபசாரப் பத்திரத்தில் கூறி வரவேற்றது. என்ன செய்வார்கள் பாவம் இப்போது இந்த ஜில்லாவிலுள்ள பார்ப்பனர்கள் எல்லாம் தமிழர்கள் செல்வாக்கைக் குறைக்க சூழ்ச்சிகள் செய்துவருகிறார்கள். பந்துலு அய்யர் மாகாணமும் காங்கிரஸ் காரியதரிசியாக்க வேண்டி ஜில்லாகமிட்டி தலைவர் சீமான் C, S சாமிநாத செட்டியாரையும் காரியதரிசி வே. சுப்பிரமணிய பிள்ளையையும் ராஜீநாமா செய்துவிடும்படி மாகாணகமிட்டி தலைவர் தூண்டிவருகிறார் இவர்கள் ராஜீநாமா செய்து விட்டால் மறுபடியும் பிராமண ராஜ்யம் ஏற்பட்டுவிடும் என்பதில் ஐயமில்லை. 1921-ம் வருஷத்தில் சீமான் மருதவாணம் பிள்ளையைத்தலைமையாக வைத்துக்கொண்டு ஸ்ரீபந்துலு அய்யர் ஆயிரக்கணக்கான ரூபாய்களை வீண்செலவும் தமது ஜாதியாருக்கும் அள்ளிக் கொடுத்தும் சரியான கணக்கில்லாமல் விழித்தும் அறிந்திருந்தும் மறுபடியும் ஷை பந்துலு அய்யரையே ஜில்லாகமிட்டி காரியதரிசியாக ஏற்படுத்த முயற்சிப்பது தமிழர்களை ஏமாற்றவேயாகும். ஸ்ரீபந்துலு அய்யர் சக்கரவர்த்தி அய்யங்கார், மகாலிங்க சர்மா, அனுமந்தராவ் முதலிய பார்ப்பனர்கள் வெளி ஜில்லாக்களுக்கு [illegible] பிரசாரம் [illegible] வருகிறார்கள். [illegible] ஜில்லாக் கமிட்டிக்கும் தாலூக்கா கமிட்டிக்கும் பண உதவியே கிடையாது. ஜில்லா பிரசாரகருக்கு பிரசா

---

## உள்ளிக்கோட்டை திலகர் வாசகசாலை முதலாம் ஆண்டுவிழா.

---

இவ்வாசகசாலையில் முதலாம் ஆண்டு விழா ஸ்ரீமான் சீர்காழி C. S. சாமிநாத செட்டியார் அக்கிராசனத்தின் கீழ் நடைபெற்றது. 18 கிராமத்தின் மகாஜனங்கள் சுமார் 5000 ஜனங்களுக்குமேல் விஜயம் செய்திருந்தனர். மகாதேவ பட்டணத்தில் உள்ள வாசகசாலையிலிருந்து மகாத்மாகாந்தி, பாலகங்காதர திலகர் உருவப்படங்களுடன் ஸ்ரீமான்கள் சாமிநாத செட்டியார் சுவாமி கணபதி ஆனந்தம், ஜனகத்தம்மாள் கணபதி பிள்ளை முதலியவர்கள் மேளவாத்தியங்களுடன் ஊர்வலமாய் அழைத்துச் செல்லப்பட்டார். ஊர்முழுவதும் தோரணங்களாலும் தேசியக் கொடிகளாலும் மிக அழகாக அலங்கரிக்கப் பட்டிருந்தது. ஸ்ரீமான் செட்டியார் அக்கிராசனம் வகித்து வாசகசாலையால் தேசத்திற்கு ஏற்படும் நன்மைகளைக் குறித்துப் பேசிவிட்டு கான்பூர் காங்கிரஸ் கதர் தீண்டாமை இனிவரும் சட்டசபைத் தேர்தல்கள் பெண்கள் சமத்துவம் பஞ்சமர்கள் முன்னேற்றம் முதலிய விஷயங்களைப் பற்றி மிகவிரிவாகவும் கேட்போர் உள்ளம் உருகுமாறும் மிக கம்பீரமாய் சுமார் 2மணி நேரம் உபந்நியாசம் செய்தார். ஜனகத்தம்மாள் தேசியகீதம் பாடியபின் சுவாமி கணபதியானந்தம், வைத்திநாத தேவர் ஜெயராம் நாயுடு, கணபதி பிள்ளை, சுப்பிரமணிய பிள்ளை, முதலியவர்கள் ராஜீய விஷயங்களை பற்றி உபந்நியாசம் செய்தனர். இரவு 10 மணிக்கு அக்கிராசனர் முடிவுரை கூறியபின் காரியதரிசி மாணிக்கவாசக தேவரால் வந்தன உபசாரம் கூறப்பட்டு சபை இனிது கலைந்தது. ஊரில் பல இடங்களில் சமத்துவப் போர்புரியும் பராக்கிரம வீரர் வருக. தீண்டாமை ஒழிக்க அரும்பாடுபடும் தலைவா வருக. அஞ்சாது சிறை சென்ற சுதந்திர புருஷா வருக என பல விளம்பரத் தட்டிகள் போடப் பட்டிருந்ததால் உள்ளிக்கோட்டை என்றும் யில்லாத காட்சியாகவிருந்தது. கூட்டத்திற்கு ஏராளமான ஸ்திரீகள் விஜயம் செய்திருந்தது குறிப்பிடத் தகுந்தது.

R. மாணிக்கவாசகன்,

காரியதரிசி,

உள்ளிக்கோட்டை, திலகர் வாசகசாலை.

---

ரச்செலவிற்கு சரியாகப்பணம் கொடுப்பதும் இல்லை. இவ்விஷயங்களைப்பற்றி எத்தனை கடிதங்கள் எழுதியும் பதில்கிடைப்பதும் இல்லை. இந்நிலைமையில் தாங்கள் டாக்டர் வரதராஜுலு நாயுடு R. K. ஷண்முகம் செட்டியார் முதலியவர்கள் தமிழ்நாடு கமிட்டியில் அங்கம் வகிப்பதில் என்னபிரயோஜனம் அவர்கள் செய்யும் சூழ்ச்சிகளையும் பிசகுகளையும் கண்டித்து ஒழுங்காக நடைபெறச் செய்யுங்கள். அல்லது நிர்வாகத்திலிருந்து பிரிந்து காங்கிரசிற்குள் தேசிய பிராமணர் அல்லாதார் கட்சியை ஸ்தாபியுங்கள். இது விஷயத்தை மற்ற தலைவர்களுடன் கலந்து யோசித்து தமிழர்கள் சமத்துவமாய் வாழ ஏற்பாடு செய்வீர்களாக.

ஒரு உண்மைத் தொண்டர்.

## மதிமோச விளக்கம்.

உலகானுபவம் பெறவேண்டுமானால், உடனே "மதிமோச விளக்கம்" என்னும் புஸ்தகத்தை வாசியுங்கள். இதில் உலகத்தில் நடக்கும், பல வகை மோசங்கள் தெளிவாய் விளக்கப்பட்டிருக்கின்றன. இந்நூலைப் படிப்பவர்கள் மோசக்காரர்களிடம் ஏமாறுமல் தப்பிக்கொள்வார்கள் என்பது திண்ணம். இது படிக்கப் படிக்க மிகவும் இன்பமா இருப்பதன்றி விடா நகைப்பையும் விளைவிக்கும். நமது பெண்கள் இப்புத்தகத்தை படித்தால் குருட்டு நம்பிக்கை என்பது இந்நாட்டை விட்டு ஓடிப்போகும். 230 பக்கங்கள் 120 மோசங்கள் அடங்கியிருக்கின்றன. விலை ரூ. 1—0—0 வி. பி. சார்ஜ் வேறு.

விலாசம்:—

ஜி. செல்வபதி செட்டி அண்டு கோ.,
பெரம்பூர் பாரக்ஸ், மதராஸ்.

## பிரமேக குல சம்ஹாரி.

பலவித கரந்தித் தடிப்புகள், 21 வித மேகரோகம், 7-வித வெள்ளைரோகம், ரணம் அரையாப்பு, சூலை, வாத முதலிய தீராத கொடிய ரோகங்களையும் ஐந்தே தினத்தில் நீக்குகிறது. புட்டி 1-க்கு ரூ. 2. ஏஜண்டுகள் தேவை. கேட்லாக் இனாம்.

ஸ்ரீராமபிரான் வைத்தியசாலை,
திருச்செங்கோடு. (தென் இந்தியா)

## "ஐஸ்வரிய இரகசியம்"

என்னும் புத்தகம் முற்றிலும் இனாம்!

ஐஸ்வரியம் அடையும் இரகசியத்தைத் தெளிவாகக் காட்டுகிறது. உடனே எழுதுங்கள்.— மறந்துவிடவேண்டாம்.

ஆர்ட் புக்ஸ் பப்ளிஷிங் கம்பெனி,
25, தெப்பக்குளம், திருச்சி.

## கவனித்து வாசியுங்கள்.

டாக்டர் பார்த் என்பவரின் ஜெர்ம்கில்லர் சோப் ஆராத ரணங்கள், புண், சொரி, சிரங்கு, முகப்பருவு, தேம்பல் எச்சிற்றேம்பல், படை மேகப்படை, மேகத்தினால் உண்டாகும் சகலவித சர்ம வியாதிகள், நமைச்சல் இன்னும் அநேகவித சர்ம வியாதிகளை ஆச்சரியமாய் குணப்படுத்தும் முகப்பருவுகளை [illegible] போக்கடிக்கும் நூற்றுக்கணக்கான நற்சாக்ஷி பத்திரங்கள் இருக்கின்றன.

3-சோப் அடங்கிய பெட்டி 1-க்கு விலை ரூ. 2—8—0. தபால், பாக்கிங் கூலி வேறு. வேண்டுவோர்,

பி. எஸ். பொம்மையா, அண்கோ.,
தபால் பெட்டி 198 மதராஸ்.
என்று எழுதி பெற்றுக்கொள்ளலாம்.

## தமிழர்.

ஓர் உயரிய மாத வெளியீடு. அறிவு ஆற்றல் ஆராய்ச்சித் துறைகளிற் சிறந்த பல அறிஞர்களின் கட்டுரைகளைக் கொண்டது.

இராயல் பதிப்பு:—

| | |
|---|---|
| உள்நாட்டிற்கு | ரூ. 2—8—0 |
| வெளிநாட்டிற்கு | ரூ. 3—0—0 |
| சாதாரண பதிப்பு | ரூ. 2—0—0 |

விலாசம்:—

அமைச்சர்
"தமிழர் நிலையம்"
தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி.

## குடி அரசு பத்திரிகை.

கிடைக்குமிடம்:—

ரயில்வே பிளாட்பாரங்களிலுள்ள எக்கின் பாதம்கம்பெனி புஸ்தக சாலைகளிலும்,
கோயமுத்தூர்—ஸ்ரீ எ. ஆர். சிவானந்த முதலியார்
சேலம்—ஸ்ரீ ராமாநுஜ புக்டிபோ
திருப்பூர்—ஸ்ரீ என். ராமசாமிநாயக்கர் மானேஜர் காந்தி கதராலயம்.
திருச்சி—ஸ்ரீ எஸ். மாசிலாமணி பிள்ளை, திருச்சிகோட்டை.
கும்பகோணம்—ஸ்ரீ என். பக்கிரிசாமி பிள்ளை, ஆரியன் பிரஸ்.
திருவாரூர்—ஸ்ரீ வி. எஸ். ராமன், தேசாபிமான சங்கம்.
நாகபட்டணம்—ஸ்ரீ எ. சக்கரபாணி பிள்ளை, கன்னாப்பட்டரை.
மதுரை—நியூஸ் ஏஜண்டு, ஈவினிங் பஜார்,
விருதுபட்டி—ஸ்ரீ பி. பழனிக்குமார பிள்ளை.
மதராஸ்—நியூஸ் அண்டு அட்வர்டைசிங் ஏஜண்டு. நெ. 31 நம்லையர் வீதி
கோலார்—ஸ்ரீ ப. மு. ராஜரத்தினம் சித்தார்த்த, புஸ்தகசாலை சாம்பியன் ரீப்ஸ் போஸ்ட்டு.
தூத்துக்குடி—நியூஸ் ஏஜண்டு.
ஈப்போ—ஸ்ரீ எம். என். பிள்ளை C/o போர்னியோ மோட்டார் (லிமிடெட்.)
சிங்கப்பூர்—பிரிட்டிஷ் அண்டு அமெரிக்கன் நியூஸ் ஏஜன்சி நெ. 6 பேட்டரி ரோட்

மற்ற ஊர்களுக்கும் ஏஜண்டுகள் தேவை.

## உண்மையான கதர்! கெட்டியான கதர்!

—:O:—

கதர் வாங்குகிறவர்கள் விலையை கவனிப்பதுடன் சரக்கு அழுத்தத்தையும், நயத்தையும், கெட்டியையும் கவனிக்கவேண்டியது முக்கியமான கடமை. தமிழ்நாடு காங்கிரஸ் கதர் போர்டாரின் உதவியாலும் மேற்பார்வையாலும், அத்தாட்சி பத்திரத்துடன் நடை பெறுகின்றது கதர் போர்டாரின் விலைக்கே விற்கப்படும்.

(காங்கிரஸ் அத்தாட்சிப் பத்திரம்.)

ஸ்ரீ காந்தி கதராலயத்தார் கை நூலால், கைத் தறியால் தயார் செய்யப்பட்ட உண்மையான கதர் உற்பத்தி செய்து நியாயமான விலைக்கு விற்கிறார்கள்.

எஸ். ராமநாதன்,
காங்கிரஸ் கதர் போர்டு காரியதரிசி.

விலாசம்:—ந. ராமசாமி,
மானேஜர், ஸ்ரீ காந்தி கதராலயம், திருப்பூர்.

## என்றுமறியாத இணையில்லா கீர்த்தி. எங்கள் ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்.

அஜீரணம், மலச்சிக்கல், நரம்புகளின் தளர்ச்சி, கை கால் ஓய்ச்சல், ஞாபகமின்மை முதலிய வியாதிகளைக் குணப்படுத்துவதில் சென்ற 45-வருஷ காலமாக என்றுமறியா இணையில்லா கீர்த்தியை யடைந்திருக்கிறது. நாங்கள் கேட்காமலே எங்களுக்கு வந்துகொண்டிருக்கும் நற்சாக்ஷிப் பத்திரங்களே போதுமான சான்றாகும். இன்றைக்கே உபயோகித்து குணத்தை அறியுங்கள்.

32 மாத்திரைகள் அடங்கிய
டப்பி 1-க்கு ரூ. 1—0—0.

விவரங்களுக்கு கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதுங்கள்:—ஆதங்க நிக்கிரஹ ஔஷதாலயம்.
26 பிராட்வே மதராஸ்.

## இந்தியர் கஷ்டநிவாரண பாங்கு "லிமிடெட்" கோயமுத்தூர்.

| | |
|---|---|
| காப்பு திரவியம் | —ரூ. 2,706. |
| மூல திரவியம் | — ரூ. 5,00,000. |
| வெளிவிடப்பட்டது | —ரூ. 64,600. |
| வசூலிக்கப்பட்டது | —ரூ. 35,540. |
| டிபாசிட்டுகள் | —ரூ. 42,012-14-0. |

டிபாசிட்டுகள் அடியிற்கண்ட வட்டி விதத்திற்கு பெற்றுக்கொள்ளப்படும்.

சேவிங்ஸ் பிக்செட் டிபாசிட்டு
இரண்டு வருஷ, கெடுவு வட்டி.
100-க்கு மாதம் 1-க்கு ரூ. 0—10—0
வருஷம் 1-க்கு வட்டி ரூ. 7—8—0
இதற்கு பிரதி மாதமும் வட்டி கொடுக்கப்படும்.

பிக்செட் டிபாசிட்டு.
ஒரு வருஷ கெடுவு, வட்டி.
100-க்கு மாதம் 1-க்கு ரூ. 0—9—0
வருஷ 1-க்கு வட்டி ரூ. 6—12—0

இதற்கு வட்டி 6-மாதங்களுக்கொருமுறையாவது வருஷத்திற் கொருமுறையாவதும் வட்டிகொடுக்கப்படும்.

இப் பாங்கானது ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருஷ காலமாக ஒழுங்காக நடந்து வருகிறது. நாளது 10-2-26-உ வருஷாந்திரக் கூட்டமும் நடைபெற்றது. இப்பாங்கானது கோயமுத்தூரில் உள்ள இம்பீரியல் பாங்கை தவிர்த்து மற்ற பாங்குகளை போல் 100-க்கு நாள் 1-க்கு ஒரு அணாவும், அதற்கும் அதிகமாகவும், அதிகவட்டி வாங்காமலும், புதிய விதிகளுடனும் குறைந்த வட்டிக்கு (அதாவது 100-க்கு, 0—12—0. 1—0—0) ரூபாயிக்கு எவ்வகையிலும் அதிகப்படாமல் ஏழை ஜனங்களுக்கு அநேக சௌகர்யமாகவும் இருப்பதோடு, குறைந்த பங்குகளினாலேயும் மானேஜிங் டைரெக்டர், அவர்களுடைய திறமையினாலும், முயர்ச்சியினாலும், பங்குக்காரர்களுக்கு முதல் வயதிலேயே 100-க்கு ஒரு ரூபாய் வட்டி கொடுக்கப்பட்டிருப்பதுவும் தவிர ரிசர்வு பண்டு ரூபாய் 2,706 சேர்ந்திருக்கிறது. நாளதுவரை யாதொரு போக்குக்குத்தியில்லாமலும் இருப்பதிலிருந்து மானேஜிங் டைரெக்டருடைய தீர்க்காலோசனையும், பாங்கின் நல்ல ஸ்திதியையும் காட்டுகிறது. மேலும் அதிகமான பங்குகள் சேர்ந்து ஏராளமான லேவாதேவி நடந்தால் இப்போது கிடைத்த இலாபத்தைவிட அதிக இலாபம் கிடைக்குமென்றும், ஏழைகளுக்கும் பெரிய உபகாரமாக இருப்பதற்கும் கடவுள் கிருபை செய்வாராக.

சுபம்! சுபம்!! சுபம்!!!

குறிப்பு:—

இந்த பாங்குக்கு ஏற்பட்டிருக்கும் டைரக்டர்கள் ஒவ்வொருவரும் தனித்தனி சொந்த பாங்கு நடத்தக்கூடிய சக்தி வாய்ந்த பெரிய பெரிய தனவந்தர்களாகவும், அமையப்பெற்றிருப்பதால் யாவரும் தங்களிடமுள்ள திரவியத்தை டிபாஸிட்டாகவும் பங்குத் தொகைக்காகவும் இப்பாங்குக்கு அனுப்பி உங்களுடைய பணத்திற்கு யாதொரு நஷ்டமின்றி வட்டியுடன் பெற்றுக்கொள்வதோடு, உங்களுடைய திரவிய சகாயத்தினாலும், ஏழைகளுக்கும் சகாயம் செய்த பாக்கியமும் அடைவீர்கள் என்பதற்கு யாதொரு தடையுமில்லை.

ஜி. ராமச்சந்திர செட்டி,
10—2—26. மானேஜிங் டைரக்டர்.


கோயமுத்தூர் ஸ்டார் பிரஸ் (லிமிடெட்) ஈரோடு பிராஞ்சு பிரசில் அச்சிடப்பெற்று சா. ராமசாமி நாயக்கரால் வெளியிடப்பட்டது.